# பணவிடு தூது

227
3-61



O-,18N.P
N61
102305

வெளியீடு

# பணவிடு தூது

குறிப்புரை விளக்கம்.

வித்துவான். வே. அண்ணாமலை
(வலம்புரி அண்ணாமலை)

வித்துவான். சு. நாராயணசாமி

அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராய நகரம் :: சென்னை-17

முதற்பதிப்பு மே, 1961.
உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை ரூபா: 1-25

O-, 18N, P
N61

TAMIL NADU ARCHIVES LIBRARY
102305
EGMORE, MADRAS

பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு, தி' நகர் சென்னை-17.

# முன்னுரை

## நூலைப்பற்றி.........

இந்நூல், 'பணவிடு தூது' எனப்படும். 1908-ஆம் ஆண்டில் மூலம் மட்டும் வெளியிடப்-பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவனின் பெயர், மாதை வேங்கடேசேந்திரன் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நூலைப் பாடிய புலவரின் பெயர் தெரியவில்லை. பழைய பதிப்பிலும் ஆசிரியர் பெயர் குறிப்பிடப் படவில்லை.

உயர்திரு இராகவய்யங்கார் அவர்கள் தாம் எழுதிய 'சேது நாடும் தமிழும்' என்ற நூலிலே, மதுரைச் சொக்கநாதர் மீது பாடப்பட்ட 'பணவிடு தூது' ஒன்று உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதைப் பாடியவர், முதுகுளத்தூர்ப் பெரிய சரவணக் கவிராயர் பேரனும், அருணசலக் கவிராயர் மகனும் ஆகிய சிறிய சரவணக் கவிராயர் என்று எழுதியுள்ளார்கள். இதிலிருந்து பணவிடு தூது இரண்டு உண்டு என்பது தெரியவருகிறது. சிறிய சரவணக் கவிராயர், மதுரைச் சொக்கநாதர் மீது பாடிய பணவிடுதூது இன்று கிடைக்கவில்லை. ஆனல், மாதை வேங்கடேசேந்திரன் மீது பாடிய பணவிடுதூது மட்டும் கிடைக்கிறது. அந்நூலே இந்நூலாகும்.

## தூதாவது யாது?

தமிழ் மொழியில் வழங்கும் 96 வகைச் சிற்றிலக்கியங்களில் தூது என்பதும் ஒன்ருகும். அஃதாவது, காதல் கொண்ட தலைவனும் தலைவியும், அவரவர் காதலை உயர்

திணைப் பொருள்களிடத்தும், அஃறிணைப் பொருள் களிடத்தும் சொல்லித், தூது சென்று வா எனக் கூறுவ தாகக் கலிவெண்பாவால் பாடப் படுவதாகும்.

இலக்கண விளக்கம் என்னும் நூலிலே,....'உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல் முந்துறு தூது' எனத், தூது என்னும் நூலுக்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. எனவே, தூது விடுவதற்குப் பொதுவாக உயர்திணைப் பொருள்களும், அஃறிணைப் பொருள்களும் உரியன ஆகும். இஃது இங்ஙன மிருக்க,

" இயம்புகின்ற காலத்து எகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ் சம்தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை."

என்று இரத்தினச் சுருக்கம் என்ற நூலிலும்,

" எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
சகிகுயில்நெஞ் சம்தென்றல் வண்டு—தொகைபத்தை
வேறுவே ருப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டுஅன்பு
ஊறிவா என்றல் தூது."

என்று பிரபந்தத் திரட்டிலும், தூதுக்குரிய பொருள்கள் பத்து எனத் தொகை கொடுத்து, வகைப்படுத்தி, வரையறை செய்யப் பட்டுள்ளன.

மேற்கண்ட இரண்டு பாக்களிலும் கூறப்பட்ட அன்னம், மயில், கிளி, மேகம், நாகண வாய்ப்புள், தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்ற பத்து மட்டுமே தூது செல்லும் தகுதியுடையன என்று, எந்த முறையை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்தார்களோ தெரியவில்லை. முதன் முதலில் தூதுப் பொருள்கள் பத்து எனச் சுட்டிக் கூறிய புலவர்க்கு, இப்பத்து வகைப்

பொருள்களைக் கொண்ட தூது நூல்கள் மட்டும் கிடைத்தன போலும். பிற பொருள்களைத் தூதுப் பொருள்களாகக் கொண்ட விறலிவிடு தூது, பணவிடு தூது, தமிழ் விடு தூது, சவ்வாதுவிடு தூது, மான் விடு தூது, வனசவிடு தூது, புகையிலை விடு தூது, நெல் விடு தூது என்ற தூது நூல்கள் கிடைக்கவில்லையோ, அல்லது அப்பொழுது பாடப்பெற வில்லையோ தெரியவில்லை. ஒருவேளை, புலவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட புலமைக் காய்ச்சல் காரணமாக, ஒருவர் மீது ஒருவர் இறப்ப இழிந்த பொருள்களைத் தூதுப் பொருளாக வைத்துச் செய்யுள் செய்வதைத் தடுப்பதற்காக, மேற்கண்ட பத்துப் பொருள்களையும் தொகைப் படுத்தினார்களோ தெரியவில்லை.

இந்தப் பத்துப் பொருள்களைத்தான் தூது விடலாம் என்று உறுதியாக அறுதியிட்டுக் கூறினால், ஆரூரர்க்கு ஆண்டவன் தூது சென்றதை எதிலே கொண்டுபோய் இணைப்பது. பத்துப் பொருள்களில் தோழி மட்டுந்தானே சொல்லப் பட்டுள்ளது. தோழன் என்று தனியாகச் சொல்லப் படவில்லையே. எனவே, சுட்டிக்கூறும் இந்தப் பத்து என்ற வரையறையை விட்டுவிட்டு, உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் தூதுக்கு உரியன என்ற பொது விதிப்படி அனைத்தையும் கொள்ளுதலே தக்கது.

மாதை வேங்கடேசேந்திரன் என்ற வள்ளலைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்ற புலவர், நெல்லேசருக்கும் காந்திமதி தேவிக்கும் நடக்கும் திருக்கலியாணத் திருவிழாவைக் கண்டு களித்தார். அக்கலியாண மண்டபத்திலே தட்டேந்தி நிற்கும் தேவதாசிகளுள் ஒருத்தியாகிய குங்குமப் பூங்கோதை என்ற பெண்ணைக் கண்டு காதல் கொண்டார். தன் காதல் நிறைவேறுமாறு, தான் பரிசு பெற்ற பணமாகிய திரவியத்தைக் குங்குமப் பூங்கோதையிடம் சென்று, தன் காதலை எடுத்துச் சொல்லி அழைத்து வருமாறு தூது

விடுகின்றார். தூது காதலுக்கு உரியது என்றாலும், இந் நூலாசிரியர் காதற் சுவையை அளவோடு நயமாகப் பாடுவ துடன், பாட்டுடைத் தலைவனின் சிறப்பையும், பணத் தினது தன்மையையும், பணம் படுத்தும் பாட்டையும், உயர்வு நவிற்சியாக இல்லாமல், தன்மை நவிற்சியாக-உள்ளது உள்ளபடியே பாடிச் செல்கின்றார்.

## பாதாதி கேச வருணனை

பாட்டுடைத் தலைவனின் சிறப்பைக் கூறவந்த ஆசிரியர், பாதம், கை, செவி, முகம், கண், நா, தோள் ஆகிய அவையவங்களை முறையே,

...“கோபாலன்

செம்பொன் அடிவணங்கும் சென்னியான்; வேற்றரசர்
பைம்பொன் முடிவணங்கும் பாதத்தான்;—விம்பமணிக்
கங்கணமும் ஏற்போர் கலிகள்எல்லாம் தீர்ப்பன்என்ற
கங்கணமும் நீங்காக் கரதலத்தான்;—சங்கையுள்ள
வெஞ்சொற் களைந்துகல்வி மேலோர் எடுத்தியம்பும்
செஞ்சொல் உகந்த திருச்செவியான்;—விஞ்சுபெரும்
கல்விக் கடலனையான்; கண்டோர் பசிதீர்க்கும்
செல்வக் கருணைத் திருமுகத்தான்;—மெல்லப்
புடைபரந்த தெள்ளமுதம் போற்கருணை வெள்ளம்
கடைபரந்த செங்கமலக் கண்ணன்;—புடைசென்று
அடுத்திட்ட பேர்க்கும் அயலார்க்கும் உண்மை
நடுத்திட்ட மேஉரைக்கும் நாவான்;—எடுத்தமத
ஓங்கல்இரு நான்கும் பொறைஉயிர்ப்ப ஒண்புவனம்
தாங்க வளர்ந்த தடம்புயத்தான்;”

என்று வருணிக்கின்றார்.

## தசாங்கம்

ஆட்சிக்கு உறுப்பாகிய மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்று சொல்லப்

படுகின்ற தசாங்கங்களை வருணிக்கும் பொழுது, சீர்மடக்கிலே சிலேடைநயம் தொனிக்க வருணிக்கின்றார்.

"நேரி மலையான் நன்கியாதும் மலையான்" என்று மலையையும், 'பாவலர் கலிவெப்பு ஆற்றினன் காவேரி ஆற்றினன்' என்று ஆற்றையும், 'குடும்ப நிலைநாட்டினன் சோழ வளநாட்டினன்' என்று நாட்டையும், 'அளகைப் பதியாம் தென் மாதைப் பதியான்' என்று நகரையும்,'நாவலர் பாமாலையான் தாமரைப்பூ மாலையான்' என்று மாலையையும் 'அருளமரர் வாசியான் பொற்கவன வாசியான்' என்று குதிரையையும், 'உததிகுடிக் குஞ்சரத்தான் வெற்றிமத குஞ்சரத்தான்' என்று யானையையும், 'மீனக் கொடியான் வெள்ளன்னக் கொடியான்' என்று கொடியையும். 'ஆலமதன் ஏழு முரசாய் அதிர்மும் முரசான்' என்று முரசையும், 'கோபாலன் என ஆதிமுதல் ஒப்பமிடும் ஆணையான்' என்று ஆணையையும் வருணிக்கும் நயம், உணர்ந்து சுவைக்கத் தக்கதாகும்.

மேலும், பாட்டுடைத் தலைவனின் உடன் பிறந்தோரை உரைப்பதுடன், வீதிவலம் வரும் சிறப்பையும், கொலுச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் புகழ்ந்து பாடுகின்றார். மாதை வேங்கடேசேந்திரன் தனக்குப் பரிசாக வழங்கிய, பணமாகிய திரவியத்தைப் புகழ்ந்து அதன் பிறப்பும், மரபும் சொல்லுகின்றார்,

## பணத்தின் மரபுப் பெயர்கள்

பல்லங்கிக்காசு, சம்பங்கிக் காசு, புல்லவட்டக் காசு, புலக்காசு, சந்தமிக்காசு. சுலுத்தான்காசு, ஆளிட்டான் காசு, வராகன், புண்ணிய வராகன், சென்னபட்டனத் தான் வராகன், சிவராயன் வராகன். மம்மதுகான் வராகன், நிசானி வராகன், சீரங்கராயன் எனும் செம்பொன் வராகன் குதிரைக் குளம்பன், கொங்குமுளை, குணுங்கலூர் வெட்டு, வெங்கன் அழகாத்திரி வெட்டு, தூற்றுக்குடியான் வெட்டு,

சுழிமுல்லா வெட்டு, புது வெட்டு, சோழியன் வெட்டு, இராமச்சந்திரன் வெட்டு, எம்பெருமான் வெட்டு, சிகாபதி யான் வெட்டு, வாழ்குருகன் வெட்டு, இராமையன் வெட்டு, கொப்பரை வெட்டு, குறு நண்டுக்கால் வெட்டு, மெய்ப்புள காரேட்டி வெட்டு, மைக்காட்டு வெட்டு, மத்தகிரிக் கண்டி ராயன் திரு, கோட்டு மின்னல், மாற்றுக் குறைச்சல், வெந்துருகல், கோழி விழுங்கல், இருப்பூறல், புதுமங்கலக் குடியான் செப்பாடல், புள்ளறுதல், வேவல், புழுங்கல், வெள்ளியிற் பொன்பூச்சு, பூச்சைய நாயக்கன் பணம், தேய்ச்ச உரை, முழுச்செம்பு, மூர்த்தி செட்டி வெட்டு, மயிலாப்பூர் வெட்டு, வீரராயன் பணம், ஓசைப் பணம், கிச்சம்மாள் வெட்டு,சங்கர செட்டிபுது மின்னல், நாகப்பன் வெட்டு, நஞ்சய்யன் வெட்டு, விசுவநாத செட்டி வெட்டு, சின்ன ராவுத்தன் வெட்டு, கோபாலச் சக்கரம், உழுந்தூர்ச் சக்கரம், திருவையாற்றுச்சக்கரம், திருச்சிராப்பள்ளிச் சிறுசக்கரம் என்று, பணம் பல மரபுப் பெயர்களைப் பெற்று வழங்கி வந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

## பணம் படுத்தும் பாடு

மேருமலையை அணுவாகவும், அணுவை மேருமலை யாகவும் செய்யும். உறவிலே பகையை உண்டாக்கும்; பகையிலே உறவை உண்டாக்கும், காட்டை நாடாக்கும்; நாட்டைக் காடாக்கும். தேடுங்கால் வாராது; வலியவரும்; வந்தாலும் தங்காது. ஒருவன் பணத்தைப் புதைத்து இறந்துபோக, ஆடு முதலியன பலிகொடுத்து அதை ஒருவன் தோண்டிப் பார்த்தால், கல்லாகவும் கரியாகவும் காட்சி தரும் என்று கூறுகின்றார்.

மக்கள் வளமாக வாழ்வதுவும் வாழ்விழந்து தாழ் வதுவும், கட்டப் புடவையின்றிச் செல்வரைக் கிட்ட

நெருங்கிக் கெஞ்சுவதும், ஆதரிப்பார் இன்றி அல்லும் பகலும் ஏங்குவதும் ஆகிய எல்லாம் பணத்தினுல்தான் என்று கூறுகின்ருர்.

"பணம் என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம்என்பர் கண்டாய் பெரியோய்"

என்ற வரியிலே, 'பணம் இல்லாதவன் பிணம்' என்ற கருத்தை வெளியிடுகின்ருர்.

## பணத்தை அடைய மக்கள் படும்பாடு

பஞ்சரத்ன மாலை என்றும், பள் என்றும், நெஞ்சு விடு தூது என்றும், கோவைத் துறை என்றும், வண்ணம் என்றும் இப்படிப் பல நூல்களைப் பாடியும், பரிசு கிடைக்காமல், நெஞ்சொடிந்து பஞ்சத்தில் பிள்ளை விற்பார் போலப், பிரபந்தங்களை விற்பதும் பணத்தின் பொருட்டே யாகும்.

இந்திர ஜால வித்தை, மந்திர வாள் வித்தை, செட்பிடு வித்தை, தண்ணீரை அசைவு இல்லாமல் நிலை நிறுத்தும் வித்தை, நெருப்பை நிலை நிறுத்தும் வித்தை, காற்றை நிலை நிறுத்தும் வித்தை, வில்வித்தை, வேஷம் போடும் வித்தை, சூனிய வித்தை, 64 கலைகளை அடிப்படையாகக் கொண்ட வித்தைகள் ஆகிய எல்லாம், பணம் கற்பித்த வித்தைகளே யாகும்.

மனைவி மக்களை விட்டுவிட்டுக், கப்பலை முறிக்கும் கடல் மீனுக்கு ஒதுங்கி, எத்தனையோ துன்பங்களை எல்லாம் கடந்து, உயிரையும் பொருட்படுத்தாது, அலைகடலைத் தாண்டி அயல் நாடுகளுக்குச் செல்வதும் பணத்தின் பொருட்டேயாகும்.

சிலர், ரசவாத வித்தையினுல் பணம் சம்பாதிக்க எண்ணி, வீட்டில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை எல்

லாம் விற்று, நகைநட்டுக்களையும் விற்றுக் கடைச் சரக்கை எல்லாம் வாங்கி, இரசவாத வித்தை செய்து இரும்பைப் பொன்னாக்க எண்ணி, உள்ளதையும் இழந்து வருந்துவதும் பணத்தாசையால்தான். மண்ணாசையையும் பெண்ணாசையையும் விட்டவரைக்கூடப் பொன்னாசை விட்டபாடில்லை. அதிக வட்டி வாங்க எண்ணி, வட்டிக்குக் கொடுப்பதும், பிறகு வட்டியையும் முதலையும் இழந்து வருந்துவதும் பணத்தாசையால்தான் என்று, பணத்தைச் சம்பாதிக்க மக்கள் படும்பாட்டை நயமுடன் கூறுகின்றார்.

## பணத்திற்கு உறவுமுறை கூறும் நயம்

''வேலைநெடு ஞாலத்தின் மெல்லியர்க்கெல் லாம்கழுத்தில்
மாலையிட வந்தமண வாளனே !—சோலிபண்ணிக்
காதலரைத் தப்பிப்போய்க் கள்ளப் புணர்ச்சிசெயும்
கோதையருக்கு ஆசைக் கொழுநனே !—பேதைதனில்
வாங்குதிரு வாங்கி மறுகளவு பார்த்திருக்கும்
ஆங்கவர்தம் கள்ளமுறைக்கு அண்ணனே !—ஓங்குகுலம்
தம்தரத்துக்கு ஒவ்வாது தாழ்ந்தகுலம் ஆனாலும்
வந்தெடுத்துப் பெண்கொடுக்கும் மாமனே!—
நொந்துமெத்தக்
கெட்டவன்கீழ்ப் பெண்டிருக்கும் கிள்ளைமொழி
யாள்வலிய
வட்டமிடும் கைச்சரச மச்சானே !—நட்டணைசேர்
கூத்திமா ரோடிருந்து கோட்டிகொள்ள நாலிரண்டு
பேத்திமார் உண்டுபண்ணும் பேரனே !—நாத்திருந்த
ஓது கலைஞானம் உள்ளதெல்லாம் கற்றுநன்றாச்
சாதிக்க வைக்கும் தகப்பனே !—பேதிக்கப்
போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறூட்டும் மாதாவே !—பேய்க்குணங்கள்
ஆனாலும் காமன்எனும் அண்ணனுக்குச்
சொன்னவண்ணம்

தானுகப் பாடுபடும் தம்பியே !—தேனுரும்
பூங்குழலார் வீட்டில் பொழுதுடனே தூதுசெல்லும்
பாங்கனுக்கு முன்புசெல்லும் பாங்கனே !"—

என்று, இந்தவிதமாகப் பணத்தை மணவாளன் என்றும், கொழுநன் என்றும், அண்ணன் என்றும், மாமன் என்றும், மச்சான் என்றும், பேரன் என்றும், தகப்பன் என்றும், மாதாளன்றும், தம்பி என்றும், பாங்கன் என்றும் காரணங் காட்டி உறவுமுறை சொல்லி அழைக்கும் விதம், படித்துப் படித்துச் சுவைத்து இன்புறத் தக்கதாகும்.

மேலும், பணத்தை, யானை பிடிக்கும் குழி என்றும், மந்திரம் என்றும், தூண்டில் என்றும், வலை என்றும், தடாகம் என்றும், சிம்புள் என்றும், களிறு என்றும், சந்திரன் என்றும், சூரியன் என்றும், சுழற் காற்று என்றும், மழை என்றும், காவலன் என்றும், பக்ஷி என்றும், காளை என்றும், இங்ஙனம் பிற பொருள்களாக உருவகப்படுத்தி அழைக்கும் நயம், உணர்ந்து சுவைத்தற் குரியதாகும்.

நெல்லேசரையும் காந்திமதி தேவியையையும் போற்றித் துதிக்கப் புகுந்த ஆசிரியர்,

"சோலைசெறி நெல்லேசர் தோள்நிறையக் காந்திமதி
மாலையிடும் ஆயிரக்கால் மண்டபத்தே—வேலைவிடம்
உண்ட பெருமானை உண்மை மறைப்பொருளை,
சண்டனைமுன் னுள்உதைத்த தாளானைப்—பண்டுபதி
னுரு யிரம்வருடம் அம்புவிக்கு வேந்தாகி
மாரு முடிதரித்த வானவனை"

என்று நெல்லேசரையும்,

"எண்ணுன்கு அறம்வளர்த்த ஈச்வரியைத் தென்இமயப்
பெண்ணுகி அண்டமெல்லாம் பெற்றவளைக்"—

"தண்டலைசூழ் காழிவரு சம்பந்தப் பிள்ளைக்குப்
பண்டுமுலைப் பால்கொடுத்த பார்வதியை,—
தொண்டருக்கோர்
ஆவியைக்;கொத் தோடுஎன்னை ஆண்டவளைக் காந்திமதி
தேவியையான் கண்குளிரச் சேவித்தேன்"

என்று காந்திமத தேவியையும் போற்றித் துதிக்கின்றார்.

இறுதியாக, மேகத்தைக் கண்டால் மயில் ஆடுவதைப் போலவும், சூரியனைக் கண்டால் தாமரை மலர்வதைப் போலவும், 'பணமே! உன்னைக் கண்டால் உளம் மகிழ்ந்து குங்குமப் பூங்கோதை என்னை வந்தடைவாள். எனவே, தூது சென்று வா' என்று கூறி நூலை நிறைவு செய்கின்றார். நூலைப்பற்றி இவ்வளவில் நிறுத்திக் கொள்கின்றோம், இனி நூலுள் நுழைந்து சுவைக்க வேண்டுகின்றோம். எங்கள் குறிப்புரை விளக்கத்துடன், இந்நூலை வெளியிட்ட அருணா பப்ளிகேஷன்ஸ் நிலயத்தாருக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

வணக்கம்!

இங்ஙனம்,

வித்துவான்: **வே. அண்ணாமலை.**
**(வலம்புரி அண்ணாமலை)**

வித்துவான்: **சு. நாராயணசாமி.**

# பணவிடு தூது

## காப்பு

(நேரிசை வெண்பா)

வெல்லும் திறல்மாதை வேங்கடே சேந்திரன்மேல்
சொல்லும் பணவிடு தூதுக்கு-வல்லவொரு
கம்பகும்பத் தானைஅன்று கைக்கழங்கு போலாடும்
கம்பகும்பத்து ஆனைமுகன் காப்பு.

## நூல்

(கலி வெண்பா)

### பாட்டுடைத் தலைவனின் சிறப்பு

1. பார்தந்த வேதன் பதும முகத்துதித்த
சீர்தந்த தெய்வத் திருக்குலத்தான்;—ஏர்தந்த

---

மாதை-மாதைப்பதி.
கம்ப கும்பத்தான்-கஜமுகாசுரன்.
கழங்கு-கழற்சிக்காய்.
கம்பம்—நடுக்கம். கும்பம்-மத்தகம்.

1. பார்—உலகம்.
வேதன்-பிரம்மா. பதுமம்—தாமரை.

நூலாசிரியர் கலிவெண்பாவின் யாப்புக்கு இயைய இலக்கணப் புணர்ச்சி விதிகளைக் கையாண்டும், உயிர்மெய் எழுத்துக்களை, மெய் எழுத்துக்களாக அமைத்தும் பாடியுள்ளார். எனினும், பாட்டைப் படிக்கின்ற பொழுதே, பொதுமக்களுக்குப் பொருள் புரிய வேண்டும் என்பது கருதி, இலக்கணப் புணர்ச்சி விதிகளைச் சற்று தளர்த்திக் குற்றியலுகரங்களும், முற்றியலுகரங்களும், உடன் படு மெய் எழுத்துக்களும், உயிர்மெய் எழுத்துக்களும் பிரிக்கப் பட்டுள்ளன.

2. முப்புரிநூல் மார்பினுன்; மூதுலகுஎல் லாம்விளங்கும்
சுப்ரமண்ய பிம்பம்அன்ன சோதியான்;—ஒப்பில்

3. உபய குலோத்துங்கன்; உண்மைஅரிச் சந்த்ரன்;
அபயன்;அக ளங்கன்; அனகன்;—சபைநிறைந்த

4. போஜன்; அளகேசன்; பூச்சக்ர வாளமனு
ராஜ விஜய ரகுராமன்;—வீசுபுகழ்

5. மானு பரணன்; வரிசைத் துரைப்பெருமான்;
நானு கலைதெரிந்த நாகரிகன்;—மீனவன்றன்

6. மண்டலமும் சோழவள மண்டலமும் தான்கவித்துக்
கொண்டதனிக் கொற்றக் குடையினுன்;—வெண்தரள

7. ஆபரண மாமுலையார்க்கு ஆசைவலை பூட்டுகழைச்
சாப மதரூப சௌந்தரியன்;—கோபாலன்

---

2. முப்புரிநூல்-மூன்று புரிகொண்ட பூணூல். பிம்பம்-வடிவம். ஒப்பில்-ஒப்புமையில்.

3. அபயன்-பயமற்றவன். அகளங்கன்-குற்றமற்றவன். அனகன்-கடவுள்.

4. அளகேசன்-குபேரன்.

5. மானுபரணன்-மானத்தை ஆபரணமாக உடையவன்.

நானுகலை-பலகலை.

மீனவன்-மீனக்கொடியை உடைய பாண்டியன்.

6. தான் கவித்துக் கொண்ட-தன் ஆட்சிக் குட்படுத்திய. கொற்றம்-வெற்றி. வெண்தரளம்-வெண்மையான முத்து.

7. ஆசைவலைபூட்டு-ஆசையாகிய வலைக்குள் அகப்படுத்துகின்ற. கழைச்சாபம்-கரும்புவில். மதரூபம்-மன்மத வடிவம்.

## அவையவச் சிறப்பு

8. செம்பொன் அடிவணங்கும் சென்னியான்; வேற்றரசர்
பைம்பொன் முடிவணங்கும் பாதத்தான்;—விம்பமணிக்

9. கங்கணமும் ஏற்போர் கலிகள்எல்லாம் தீர்ப்பன்என்ற
கங்கணமும் நீங்காக் கரதலத்தான்;—சங்கையுள்ள

10. வெஞ்சொற் களைந்துகல்வி மேலோர் எடுத்தியம்பும்
செஞ்சொல் உகந்த திருச்செவியான்;-விஞ்சுபெரும்

11. கல்விக் கடலனையான்; கண்டோர் பசிதீர்க்கும்
செல்வக் கருணைத் திருமுகத்தான்;—மெல்லப்

12. புடைபரந்த தெள்ளமுதம் போற்கருணை வெள்ளம்
கடைபரந்த செங்கமலக் கண்ணன்;—புடைசென்று

---

8. "கோபாலன் செம்பொன் அடிவணங்கும் சென்னியான்" என்று குறிப்பிடுவதால், பாட்டுடைத்தலைவர் வைஷ்ணவ மரபினர் என்பது தெரியவருகிறது. விம்பம்-ஒளி. 8.முதல் 14 வரை உள்ள கண்ணிகளில் அவையவச் சிறப்பு வருணனை அமைந்துள்ளது.

9. கங்கணம்-ஆடவர் அணியும் வளைபோன்ற ஒரு வகை ஆபரணம். கங்கணம்-உறுதி. கரதலம்-கை. சங்கை-ஐயம்.

10. வெஞ்சொல்-கொடுஞ்சொல். செஞ்சொல்-சொல்லுகின்றவர், கேட்கின்றவர் ஆகிய இருவருக்கும் நன்மையைத் தருகின்ற செம்மையான சொல். உகந்த-விரும்பிய.

11. கருணை-அனைத்து உயிர்களிடமும் காட்டும் அருள்.

12. புடை-பக்கம். கடை-கண்ணின் கடை.
புடைசென்று-அருகில் சென்று.

13. அடுத்திட்ட பேர்க்கும் அயலார்க்கும் உண்மை
நடுத்திட்ட மேஉரைக்கும் நாவான்;—எடுத்தமத

14. ஓங்கல்இரு நான்கும் பொறைஉயிர்ப்ப ஒண்புவனம்
தாங்க வளர்ந்த தடம்புயத்தான்;—நீங்கா

**பிற சிறப்புக்கள்**

15. இடும்பைக் கொடுங்கலிதீர்த்து எண்ணில்பல் கோடி
குடும்பப்ப்ர திஷ்டைசெய்த கோமான்;—அடும்போரில்

16. வான்எதிர்த்த மேரு மலைவந்து எதிர்த்தாலும்
தான்எதிர்த்து வெல்லும் தனுவிஜயன்;—சேனைத்

17. தளங்கும்பி டக்கனக தண்டிகையும் தானும்
விளங்கும் தனிப்புருஷ மேரு;—வளம்பெறும்இத்

18. தேசவிவ காரம், செகத்திலுள்ள செய்தி, துரை
வாசல் விவகாரம், மற்றெவையும்—யோசனைசெய்

19. மந்திரி மாரும், மறுமன்னர் ஏவலரும்,
தந்திரி மாரும், தளாதிபரும்,—முந்தும்

---

13. நடுத்திட்டம்-நடுவு நிலைமையுடன்.

14. மதஓங்கல் இருநான்கு-மதநீர் வழியும் மலைபோன்ற திசையானைகள் எட்டு. பொறைஉயிர்ப்ப-பூமியைச் சுமக்கும் பாரம் தணிய. தடம் புயம்-விசாலமன தோள்.

15. இடும்பை - துன்பம். குடும்பப்ப்ரதிஷ்டை - குடும்பத்தை நிலைத்து வாழச் செய்தல். அடும்—வெல்லும்.

16. தனுவிஜயன் - அருச்சுனன். சேனைத்தளம் - படைத்தளம்.

17. கனகதண்டிகை - பொன்னாலாகிய பல்லக்கு. தனிப்புருஷமேரு-ஒப்பற்ற இமயமலைபோலச் சிறந்தவன்.

18. செகம்-உலகம்.

19. மந்திரி-அமைச்சர். ஏவலர் - பணியாளர். தந்திரி - தந்திரமுள்ளவர். தளாதிபர்-தளகர்த்தர்கள்.

20. தினசரிதக் காரர்களும், சீமைக்கணக்கு அங்கு
அனுதினம்வா சிக்கும் அவரும்,—கனமுடைய

21. வர்த்தகரும், குர்ச்சரரும். மாராட ரும்கொலுவில்
தத்தம் வரிசைகொடு தாம்நிற்ப;—நித்தரொக்கச்

22. சாளிகை கட்டிவைக்கும் தந்திரமும், பிந்திவரும்
பாளையக் காரர் பணங்களுக்கங்கு—ஆள்அனுப்பும்

23. வல்லமையும், கேட்கும் வரியோலைக்கு உத்தரங்கள்
சொல்லுவதி லேநினைவின் சூட்சமமும்,—எல்லைகண்டு

24. கூறப் படாத குளப்பாய்வும், காற்பாய்வும்,
ஏறப் பயிர்கொளுத்தும் ஏற்பாடும்,—பேறுதரும்

25. தேவா லயத்தில் தினப்பூசை தப்பாமல்
வேவாள் அனுப்பும் விசாரிப்பும்,—நேர்வாகக்

---

20. தினசரிதக்காரர்-நாட்குறிப்பை எழுதி வாசிக்கின்றவர். சீமைக்கணக்கு-நாட்டு வரவுசெலவு கணக்கு. கனம்-பெருமை.

21. குர்ச்சரர்-குஜராத்தியர். மாராடர் - மகாராஷ்டிரர். தத்தம்வரிசைகொடு- தங்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ற காணிக்கைப்பொருள் கொண்டுவந்து.

22. சாளிகை-பணத்தைக் கட்டிவைக்கும் பணப்பை, பாளையம்-போரில்உதவிய படைத்தலைவருக்கு விடப்படும் கிராமம்.

23. வரிஓலை-எழுதியஓலை. உத்தரம்-மறுமொழி. சூட்சமம்-நுண்ணறிவு.

24. குளப்பாய்வும் - குளத்திலிருந்து நீர்பாய்ச்சப்படும் நிலங்கள். காற்பாய்வும்-கண்வாயிலிருந்து கால்வாய் வழியாக நீர்பாய்ச்சப்படும் நிலங்கள்.

25. வேவாள்-வேவுகாரன். அனுப்பும்-அனுப்புதலும்-

26. காணிக்கைக் காரர் கணக்குக்கேட்டு அவ்வவர்தந்
த்ராணிக்குத் தக்கதிட்டம் செய்வதுவும்,-பாணித்துச்

27. செய்யும் நயபயமும், சேரும் சனங்களுக்குளன்
ஐயன் புரியும் அரவணைப்பும்,—வையகத்தில்

28. மற்றொருவ ருக்கு வருமோ? வராதுஎன்று
கொற்றவர்எல் லாம்எடுத்துக் கொண்டாட,—முற்றும்

29. திருவடி தேசமொரு செங்கோல் செலுத்தும்
பருவம்எல்லாம் நன்றுப் பழகி, ஒருமுகம்கொண்டு

30. அட்டவணை இட்டதுபோல் அத்தனையும் தானிருந்து
சட்டமிடு கின்ற சமுகத்தான்;—தொட்ட

### தசாங்கம்

### (மலை)

31. நிலையான மேரு நிகரான நேரி
மலையான்; நன்கியாதும் மலையான்;—உலகுஉய்யத்

---

26. தந்த்ராணிக்கு-தம்தகுதிக்கு. பாணித்து-தாமதித்து.

27. நயபயமும்-நன்மையும்பயனும். அரவணைப்பு-பாம்பு ஒன்றைஒன்று தழுவுவதைப்போலத் தழுவிச்செய்யும் ஆதரவு.

28. கொற்றவர்-அரசர்.

29. பருவம்-காலம்.

30. மேரு-மேருமலை.

31. நேரிமலை-சோழநாட்டில்உள்ளஒருமலை. யாதும்மலையான்-எதற்கும் மலைக்கமாட்டான். உலகுஉய்ய-உலகம் வாழ.

## (ஆறு)

32. தோற்றினன்; தண்ணளியால் சொற்பா
வலர்கலிவெப்பு
ஆற்றினன்; காவேரி ஆற்றினன்;—நாற்றிசைக்கும்

## (நாடு)

33. காட்டினன் தன்புகழைக்; கற்றோர் குடும்பநிலை
நாட்டினன்; சோழவள நாட்டினன்;—ஈட்டும்

## (நகர்)

34. நிதியால் மிகுந்த நிறைவாழ்வு அளகைப்
பதியாம்தென் மாதைப் பதியான்;—அதிர்திரைப்பால்

## (மாலை)

35. வேலையான் போற்கருணை மேன்மையான்; நாவலர்பா
மாலையான்; தாமரைப்பூ மாலையான்;—பால்எகினத்

---

32. தண்ணளி- கருணை. கலிவெப்புஆற்றினன் - துன்பமாகிய வெம்மையைத் தணித்தவன்.

33. குடும்பநிலைநாட்டினன் -குடும்பத்தைநிலைபெறச்செய்தவன். ஈட்டும்-சம்பாதிக்கும்.

34. அளகைப் பதி-அளகாபுரி; குபேரன்நகர். அதிர்திரை-முழங்கும் அலை.

35. பால்வேலையான்-பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன். பாமாலை-பாக்களால் ஆகியமாலை. பூமாலை-பூக்களால் ஆகிய மாலை. பால்எகினத் தேசியான்-பால் போன்ற வெண்மையான அன்னப்பறவையாகிய வாகனத்தை உடைய பிரமன். எகினத்தேசி என்பது உருவகம்.

## (குதிரை)

36. தேசியான் ஈன்ற செகம்காத்து அருளமரர்
வாசியான்; பொற்கவன வாசியான்;—நேசமிலா

## (யானை)

37. வஞ்சரைத்தான் சற்றும் மதியான்; உததிகுடிக்
குஞ்சரத்தான்; வெற்றிமத குஞ்சரத்தான்;—விஞ்சும்

## (கொடி)

38. படியான்; அதுபுகழும் பான்மையான்; மீனக்
கொடியான்;வெள் அன்னக் கொடியான்;—வடிவேல்

## (முரசு)

39. அரசான வெற்றியான்; ஆலைமதன் ஏழு
முரசாய் அதிர்மும் முரசான்;–பரசுமனு

## (ஆணை)

40. நீதிபெறும் முத்ரை நிருபம்கோ பாலன்என
ஆதிமுதல் ஒப்பமிடும் ஆணையான்;–பூதலத்தில்

41. திக்கெல்லாம் வந்து திறையளக்கும் செங்கோன்மைச்
சொக்கநா தேந்த்ர துரந்தரிகன்;–முக்யமுள்ள

---

36. செகம்-உலகம். வாசி-குதிரை. கவனம்-குதிரைநடை.

37. உததி குடி-குடிப்பெயர், குஞ்சரம்-யானை.

38. விஞ்சும்படியான்-மிகுந்த குணமுடையவன்.அன்னக் கொடியான்-அன்னக்கொடியை உடையவன்.

39. ஆலைமதன்-ஆலையில் பிழியப்படும் கரும்பு வில்லை உடைய மன்மதன்; அல்லது பிரிந்த காதலர்க்குத் துயர்தரும் மன்மதன். மும்முரசு - வீரமுரசு, நியாயமுரசு, மணமுரசு. பரசுமனு-போற்றப்படும் மனுநீதி.

40. முத்ரை-இலச்சினை. ஒப்பம்-கையொப்பம்.

41. துரந்தரிகன்-(அரச) பாரத்தைத் தாங்குகின்றவன்.

42. பூசுரர்க்குத் தானமிட்டும், பூசைபல செய்தும்இந்தத்
தேசமுற்றும் காக்கவந்து சென்மித்து,—ராசரிக

43. முத்ரைபெற்ற ரங்ககிர்ஷ்ண முத்துவீ ரேந்த்ரன்அருள்
வைத்தகொற்ற வாசலுக்கோர் மந்திரியாய்,—
மொத்தக்

44. கணக்கை வகைகண்டு கற்பித்த பொக்ஷப்
பணக்குறைவா ராமற் பணித்து,—வணக்கமிலாக்

45. கூடலூர்க் கம்பைமுதற் கொண்டு மலையாள
நாடளவும் ஆணை நடத்துவித்துப்,—போடுகின்ற

46. வீட்டுவரி எப்பொழுதும் வேண்டாம் எனநிறுத்திக்
காட்டுவழிச் செல்வாரைக் காப்பாற்றி,—ஆட்டுபுனல்

47. கங்கை நதிமுதலாக் கன்னித் துறைவரைக்கும்
எங்கணும்இன் னுன்என்று இலக்காக்கிச்;—சிங்களவர்,

48. மச்சர், இலாடர், மகதர், கலிங்கத்தர்,
குர்ச்சரர், கோசலர், கொங்கணர்,—உச்சினர்,

---

42. பூசுரர்-அந்தணர். சென்மித்து-பிறந்து.

43. வாசலுக்கோர் மந்திரி-வாசற்பிரதானி.

44. கற்பித்த-கட்டளை இட்ட. பொக்ஷம் - கருவூலம். பணித்து-ஈந்து. வணக்கமிலா-பணிவில்லாத.

45. ஆணை-கட்டளை.

46, ஆட்டு புனல் கங்கை-தீர்த்த மாடுவதற்குரிய கங்கை நதி.

47. கன்னித்துறை-கன்னியாகுமரி. இன்னுன்-இத்தகையவன்.

48. மச்சர்-மச்சதேசத்தார். இலாடர்-இலாடதேசத்தார். மகதர்-மகததேசத்தார். குர்ச்சரர்-கூர்ச்சரதேசத்தார். கொங்கணர்-கொங்கணதேசத்தார்.

49. மாகதர், ஈழர், வடுகர், அரிவாளர்,
கேகயர், ஆரியர், கேரளத்தர்.—ஓகைபெறும்

50. வங்கர், குலிந்தர், மராடர், கருநாடர்,
கொங்கர், குகுதர், குழாம்நெருங்க-எங்கும்

51. நிறைகொலுவாய்த் தானிருந்து, நீதிமனு வாகித்
திறைகொணர்ந்த வேந்தர் தினமும்—முறைமுறையே

52. தெண்டனிடும் வாசல் திருவேங் கடநாத
மண்டலிகன் பெற்ற வரபாலன்;—பண்டைநாள்

53. ஆதிசுப்ர மண்யர்அம ரர்சிறை மீட்கவந்த
சோதி மயவடிவாய்த் தோன்றியபின்,—நீதிதிகழ்

54. ஆறுமுகம் வெவ்வேறு அவதாரம் ஆகிஇந்நாள்
வீறுபுவி காக்கவந்த மேன்மைபோல்,—பேறுமிகத்

55. தன்னுடனே ஐவர் சகோதரரும் தானும்எழில்
மன்னவர்சி காமணியாய் வந்தபிரான்;—மின்னும்

56. மருக்குங் குமமார்பன்; மார்க்கண்ட வாழ்வாய்
இருக்கும் துரைவேங் கடேசன்;—பெருக்கமுள்ள

---

49. மாகதர்-மகததேசத்தார். ஈழர்-சிங்களதேசத்தார். வடுகர்-தெலுங்கர். அரிவாளர்-கொடுந்தமிழ் நாட்டினர்.

50. குலிந்தர்-குலிந்த தேசத்தார். கருநாடர்-கன்னட தேசத்தார். கொங்கர்-சேரதேசத்தார். குகுதர்-குகுத தேசத்தார். குழாம்-கூட்டம்.

51. திறை-கப்பம்.

52. தெண்டனிடும்-வணங்கும். மண்டலிகன்-மற்றொருவரைப்பணியாமல் அரசாள்வோன். வரபாலன்-மேன்மைபொருந்தியவன். பண்டைநாள்-முன்பு.

54 வீறு-பெருமைமிக்க. புவி-பூமி.

56. மரு-மணம். மார்க்கண்டவாழ்வு-என்றும் பதினாறு வயதுடைய வாழ்வு.

57. தேசப்ர தானமெனும் தென்மதுரை வீட்டுக்கு
வாசப்ர தானி; மகாராசன்;—ராஜரிகக்

58. கிம்புரிமால் யானைசொர்ண கிர்ஷ்ணபூ பாலனுக்குத்
தம்பியென வந்த தயாளுவாய்,—அம்புவியில்

**உடன் பிறந்தோர்**

59. எண்ணெண் கலாஞானம் எல்லாம் தெளிந்தமணி
வண்ணப் பெருமாள் மகிபதியும்,—தண்ணளியால்

60. தேசமோர் ஆணைகொண்டு செங்கோன்மை செய்யவந்த
ராசகோ பாலந ராதிபனும்,—நேசமிகு

61. துங்கன்அக ளங்கன் துலங்குகன காவியப்ர
சங்கன் கனக சபாபதியும்,—இங்கிதம்சேர்

62. திங்கட் திருமுகத்தில் செங்கமலை கூத்தாடும்
வெங்கட்ட ராம விதரணனும்,—இங்கிவர்கள்

63. பின்னுதித்த நால்வர் பிராணபதத் தம்பியராம்;
முன்னுதித்து வந்த முகூர்த்தவான்,—மன்னும்அர

---

57. தேசப்ரதானம் - தேசத்தில் சிறந்தது. வாசப்ர தானி-வாசல்பிரதானி.

58. கிம்புரி-யானைத் தந்தத்தில் அணியும் பூண்.

59. எண்ணெண்கலாஞானம்-64வகைக்கலை அறிவு. மகிபதி-அரசன். தண்ணளி-கருணை.

60. நராதிபன்-மக்கள் தலைவன்.

61. துங்கன்-உயர்ந்தவன். அகளங்கன்-குற்றமற்றவன். பிரசங்கன்-பேச்சாளன். இங்கிதம்-இனிமை.

62. செங்கமலை-திருமகள். விதரணன்-ஈகையாளன்.

63. பிராணன்-உயிர். முகூர்த்தம்-நாழிகை(நல்லநேரம்). அரவிந்தமலரோன்-பிரமன்.

64. விந்தமல ரோன்ஈன்ற விப்ரகுல தீபம்என
வந்தவேங்க டேச மகிபாலன்;—சந்ததமும்

65. தாய்த்துணைபோல் எங்கள் தமிழ்ப்பாண்டி நாடாள
வாய்த்தவேங்க டேச மகிபாலன்;—வேய்த்தடந்தோள்

66. தேனனைய சொல்லியர்க்கோர் சீவகச மானவெகு
மானவேங்க டேச மகிபாலன்;—தானுகந்து

67. முத்தமிழ்வா ணர்க்குள் முழுநோக்கம் என்னிடத்தில்
வைத்தவேங்க டேச மகிபாலன்;—புத்தமுத

68. சீதசந்த்ர பிம்பத் திருமுகத்தான்; செய்யதமிழ்
மாதைவேங்க டேச மகிபாலன்;—பூதலத்தை

69. ஏகசக்ர மாப்புரக்கும் இராஜீதா னிக்கிணங்கும்
பாகுபெற்ற நெல்வேலிப் பட்டணத்தில்;—ஓகையுடன்

**வீதி வலம் வருதல்**

70. மேலாம் அரண்மனைக்குள் மேவிக் கொலுவிருந்து
மாலை புகுந்து வரும்வேளை,—நாலுதிக்கும்

---

64 விப்ரர்-அந்தணர். மகிபாலன்-அரசன். சந்ததமும்-எப்பொழுதும்.

65. தாய்த் துணைபோல்-குழந்தைக்குத்தாய் துணையாவதைப்போல. வேய்-மூங்கில். தடம்-விசாலமான.

66. தேனனைய-தேன்போன்ற. சீவகசமான. உயிருக்குச் சமமான. உகந்து-விரும்பி.

67. முத்தமிழ்வாணர்-முத்தமிழ்ப்புலவர். முழுநோக்கம்-முழுஅபிமானம்.

68. சீதசந்த்ரபிம்பம்-குளிர்ச்சிபொருந்திய சந்திரவடிவம். பூதலம்-மண்ணுலகம்.

69. ஏகசக்கரம்-ஏகர்சக்கராதிபதியாக. புரக்கும் - பாதுகாக்கும். பாகு-பாங்கு. ஓகை-மகிழ்ச்சி.

70. நாலுதிக்கும்-நாலுதிசையும்.

71. கட்டியங்கள் ஆர்ப்பக், கரடமத யானையின்மேல்
கொட்டியட மாரங்கள் கோஷிப்ப,—எட்டிய

72. பேரி முழங்கப், பெரியபதி னெட்டுவகை
மூரிநெடு வாத்தியங்கள் முன்னதிர,—நேரே

73. நடநா டகசாலை நட்டுவன்மார் தாளத்
துடனேசங் கீதம் ஒலிக்கப்,—புடையே

74. அருவிவல்ல யத்தில் அழுந்துபசுந் தங்கம்
இருபுறமும் மின்னிட்டு எறிப்பத்,—தெருநிறையக்

75. கொஞ்சிவரும் மச்சிக் குதிரைகள்நிர்த் தம்புரியச்
சஞ்சுப வர்க்கம் தளதளென,—மிஞ்சும்

76. இருள்அறுதீ வட்டிகள் எண்ணிலமுன் செல்ல,
மருவுபல தீவேட்டு வர்க்கம்,—பொருவில்

---

71. கட்டியம்-கட்டியம்கூறுதல். கரடமதம்-யானைமதம். கொட்டிய-முழங்கிய. கோஷிப்ப-முழங்க. எட்டிய-எட்டியதூரம்வரை.

72. பேரி-முரசு. மூரி-வலிமை. அதிர-முழங்க.

73. நடநாடகசாலை - நடன அரங்கம்; நாடக அரங்கம். புடை-அருகில்.

74. வல்லயம் - ஒழுங்காக அமைந்துள்ள ஈட்டிவகை. எறிப்ப-பிரகாசிக்க.

75. மச்சிக்குதிரை-மச்சதேசத்துக்குதிரை. நிர்த்தம்-நாட்டியம். சஞ்சுபவர்க்கம்-அரசர்க்கு உரிய விருதுகளின் தொகுதி.

76. இருள் அறு தீவட்டிகள்-இருளை ஓட்டுகின்ற தீப்பந்தங்கள். தீவேட்டுவர்க்கம்-வேள்வித்தீத்தொகுதி. பொருவில்-ஒப்புமை இல்லாத.

77. பகல்வர்த்தி இத்தனையும், பக்கம் நெருங்கி
இகலிட்டு இரவுபகல் ஏய்ப்பத்,—தகும்உபய

78. சாமரைகள் வீசத், தமனியப்பொற் பாவாடை
காமருபொற் காளாஞ்சி கைக்கொண்டு,-கோமளமாச்

79. செல்வார் வரிசைகொடு செம்பொற் பணியிலங்க,
வில்வாள் பரிசையொடு வேண்டுவன—பல்வகையாம்,

80. ஆயுதக் காரர் அளவிலர்முன் னேநடக்கத்,
தூயபல தண்டிகைகள் சூழ்ந்துவர,—நாயகமாய்த்

81. தங்கமும் முத்தும் தனிப்பவள ராசியுமே
எங்கும் ஒளிவிட்டு எறிப்பதாய்,—ரங்ககிர்ஷ்ணன்

82. முத்துவீ ரேந்த்ரன் முழுவரிசை தந்தனுப்பும்
கொத்துமணித் தண்டிகைமேற் கொண்டேறிச்,
—சித்தம்

83. விரும்பிஅள கேசன்போல் வீதிவலம் வந்து,
திரும்பி அரண்மனைக்குட் சென்று,—பெரும்பார்க்கு

---

77. வர்த்தி-பரிமளதிரவியங்களைக் கூட்டிச் செய்த வத்தி. இகலிட்டு- மாறுபட்டு. இரவு பகல் ஏய்ப்ப-இரவு, பகல் போல் விளங்க (இரவும்பகலுமாக.) தகும் உபய-பொருத்தமான இரண்டு.

78. சாமரை - வெண்சாமரை. தமனியம் - பொன். பாவாடை - நடைசீலை. காமரு - விரும்பத்தக்க. காளாஞ்சி-தாம்பூலம்முதலியன.கோமளம்-இளமை.

79. பணி-ஆபரணம். பரிசை-கேடகம்.

80. தண்டிகை-பல்லக்கு. நாயகம்-தலைமை.

81. பவளராசி-பவளத் தொகுதி.

82. கொத்து-தொகுதி. சித்தம்-மனம்.

83. அளகேசன்-குபேரன். பார்க்கு-உலகுக்கு.

4B
9-76

## கொலுச் சிறப்பு

84\. இறையவன்எங் கோமான் இரங்கவிலா சத்தே
நிறைகொலுவாய் வீற்றிருக்கும் நேரம்,
—நறைமலர்ப்பூம்

85\. கொத்தலர்தார் மார்பன் கொலுவிருக்கும் சிங்காரம்
அத்தனையும் கண்டேன்; அகம்குளிர்ந்தேன்;
—மெத்தமெத்தப்

86\. போசன் சமுகம் பொலிவென்பார்; மாதைவேங்க
டேசன் சமுகத்துக்கு ஈடாமோ ?—ராசர்பலர்

87\. கூடும் சமுகம்; குறையாது லெட்சுமிகூத்து
ஆடும் சமுகம் அதுவன்றோ ?—தேடுகின்ற

88\. வாக்கில் வியாழமிங்கு வந்ததென்று லோகமெல்லாம்
காக்கும்எச மான்எதிர்போய்க் கையெடுத்தேன்;—
—பாக்ய

89\. துரந்தரா ! அன்னசத்ர சோமா ! புவன
புரந்தரா ! மெய்ஞ்ஞான போதா !—நிரம்புகொடைக்

---

84\. இரங்க விலாசம்-மாளிகையின் பெயர். நறை-தேன்.

85\. தார்-மாலை. சிங்காரம்-அழகு. அகம்-உளம்.

86\. போசன்-போசராசன். சமுகம்-சபை.

88\. வாக்கில் வியாழன்-சாதகத்தில் இரண்டாம் இடமாகிய வாக்குஸ்தானத்தில் வியாழன் இருத்தல்.(அவன் அறிஞனாகவும் நாவலனாகவும்இருப்பான்.)கையெடுத்தேன்-கைதொழுதேன். பாக்ய-பாக்கியமுள்ள.

89\. துரந்தரன்-அரசபாரந் தாங்குவோன். சோமன்-ஒரு வள்ளல். புவனம்-உலகு. மெஞ்ஞானபோதன்-மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கின்றவன்.

90. கன்னு ! கவிக்குக் கனகாபி ஷேகம்செய்
மன்னு ! சவுந்தரிய மன்மதா !—பொன்னுரம்

91. பூட்டிய மார்பா ! புசபெலவீ மா!விசயா !
தீட்டிய வேற்கைச் செயதுங்கா !—நாட்டியதோர்

92. யாகாதி கர்மம் இயற்றி இமையோர்க்கும்
ஆகாரம் நல்கும் அபிராமா !—யோகமனே

93. தீரா ! ரணதுங்கா ! செந்தமிழோர் துன்பபரி
காரா ! அனவரத கல்யாணு !—பாராளும்

94. மானபரா ! என்று மகாராசன் கீர்த்திஎன்னல்
ஆனது மாத்திரம்கொண் டாடினேன்;—தானும்

95. திருக்கைதனை நீட்டித் திரள்சமுகம் தன்னில்
இருக்கை மகிழ்ச்சியுடன் ஈந்தான்;—உருக்கிளங்கோன்

---

90 கன்னன்-கர்ணன். கவிக்கு-கவிஞர்களுக்கு. கனகாபி ஷேகம்-பொற்காசுகளால் அபிஷேகம் செய்தல். சவுந்தரியம்-அழகு. பொன்னுரம்-பொன்னுலாகிய மாலை.

91 புசபெலம்-தோள்வலிமை. வேற்கை-வேலைக்கையிலே உடைய. செயதுங்கன்-வெற்றிச் சிறப்புடையோன்.

92 யாகாதிகர்மம் - யாகம் முதலிய செயல்கள். இமையோர்-தேவர். அபிராமா-அழகுடையவனே. மனோதீரா-மனவலிமை உடையவனே.

93. ரணதுங்கன்-யுத்தகளத்தில் போர்புரிவதில் வல்லவன். துன்ப பரிகாரன்-துன்பத்தைப் போக்குகின்றவன். அனவரதம்-எப்பொழுதும்.

94. மானபரா-மதிப்பிற்குஉரியமேலோன். கீர்த்தி-புகழ். ஆனதுமாத்திரம்-முடிந்தவரையில். தானும்-அவனும்.

95. திருக்கை-அழகியகை. இருக்கை ஆசனம்.

96. தன்னுடைய சித்தத்தே சந்தோஷம் கைமீற,
என்னுடைய வண்ணம் அரங் கேற்றுதலும்,
—மின்னுமுழு

97. நீலமொன்று கைக்கு நிறைந்த கணையாழி,
சாலுவை, செம்பொற் சரப்பணியும்,—மேலும்

98. விரும்புபல பூஷணங்கள், மிக்ககட்டு வர்க்கம்,
தரும்பரிசில் அத்தனையுந் தந்து,—திரும்பவும்என்

### பணத்தின் இயல்பு

99. பாமாலை பெற்ற விலைக்குப் பதின்மடங்காச்
சீமான் கொடுத்த **திரவியமே**!—நாமம்

100. பணமே! எனைப்படைத்த பாக்கியவா னே!வங்
கணமே!என் ஆருயிரே! கண்ணே!—குணநிதியே!

101. சாம்புநதி தீரத்தும், சாளக் கிராமத்தும்,
மேம்படுசித் தாதிகள்செய் வித்தையிலும்,
—தேம்பொழியும்

---

96. கைமீற-அளவுமீற. வண்ணம்-சந்தப்பாடல்.

97. கணையாழி - மோதிரம். சாலுவை - உத்தரீயம்; மேலாடை. சரப்பணி-மணிபதித்த ஆபரணம்.

98 பூஷணங்கள்-அணிகலன்கள். கட்டுவர்க்கம்-கட்டிக் கொள்ளும் ஆபரணங்கள். திரும்பவும்-மறுபடியும்.

99. பாமாலை-பாக்களால் ஆகிய மாலை. பதின்மடங்கு-பத்துமடங்கு. திரவியமே-செல்வமே.

100. வங்கணம்-சிநேகம். குணநிதி-கடவுள்.

101. சாம்புநதி-மேருமலையின் தென்பகுதியில் ஓடும் ஆறு. சாளக்கிராமம்-ஓர் ஊர். சித்து-மாயவித்தை. தேம்-தேன்.

102. பன்றி மலையினுய்நீ பண்டுபிறந் தாய்அங்கு
நின்றுலகம் எங்கும் நிறைந்திட்டாய்;—ஒன்றுகேள்

103. ஈசனுனக்கு ஒப்பென்பார், ஈசனைஉண் டாக்கிஅவன்
பூசனைநீ செய்விப்பாய் புண்ணியா;—பேசுங்கால்,

104. மூவர் கடவுளர்கள், மூவரில்ஒன்று ஆனதனித்
தேவன் மகிமைதனைச் சென்றேத்தற்கு—ஆவதுபோல்

105. சின்மயமாம் உன்னுடனே செம்புவெள்ளி சேர்ந்தாலும்
உன்மயமே எங்கும் உயர்ச்சிகாண்;—பொன்மகளை

106. மார்புதனில் மாயோன் வரிசையா வைத்ததுநின்
பேர்மகிமை கண்டாய் பெரியோனே !—பாருலகில்

107. ஆன்ற பலகோடி ஆத்மவர்க்கம் அத்தனையும்
ஈன்ற பிரமனும்நீ ஈன்றமகன்;—தோன்றுமொரு

108. நற்பொருளுண்டு ஆங்கவன்றன் நாமம் இரணிய
கெற்பன்என்று சொல்வதும்நான் கேட்டிலனோ ?
—கற்பனையால்

109. ஆங்கவன்உண் டாக்கும் அகிலாண்ட கோடிஎல்லாம்
தாங்குமக மேருவும்நீ தானன்றோ ?—தீங்கின்றி

---

102. பண்டு-முன்பு.

103. பூசனை-வழிபாடு.

104. மூவர் கடவுள்-அரன், அரி, அயன்.

105. சின்மயம்-ஞானமயம். பொன்மகளை-திருமகளை.

106. மாயோன்-திருமால்.

107. ஆத்மவர்க்கம்-உயிரினங்கள்.

108. இரணியகெற்பன்-பிரமன். இரணியம் என்றால் பொன் என்ற பொருளும் உண்டு.

109. கற்பனை-கட்டளை. அகிலாண்டம்-எல்லாஉலகங்களையும். மகமேரு-பொன்மலை.

110. எண்ணுன்கு அறம்வளர்த்தி ரக்ஷிக்கும் காந்திமதிப்
பெண்ணுர் அமுது பிறந்ததலம்,—அண்ணலே !

111. முந்தி மயமான முழுச்சிமய வெற்புஎன்பார்;
அந்தமலே உன்றன் மயமலவோ ?—எந்தையார்

112. முந்தப் பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும்
அந்தக் கனகசபை யார்வடிவம்?—நிந்தையிலா

113. உன்மரபு சொல்ல ஒருகோடி நாட்செல்லும்;
என்மனதில் வந்தது இயம்புவேன்;—நன்மைதரும்

**பணத்திற்கு வழங்கிய பழைய மரபுப் பெயர்கள்**

114. பல்லங்கிக் காசு, பழையசம்பங் கிக்காசு,
புல்லவட்டக் காசு, புலக்காசும்—அல்லாமல்,

115. சந்தமிக் காசு, தருசுலுத்தான் காசுமுதல்,
அந்தமோடு ஆளிட்டான்கா சென்றும்,—செந்தீக்கு

116. உருகுபவ ளக்காட்டில் உள்ள வராகன்,
வருபிரதி புண்ய வராகன்,—பெருகுமொரு

117. சென்னபட்ட னத்தான், சிவராயன், மம்மதுகான்,
மன்னு நிசானி வராகனுடன்,—சொன்னகிரிச்

---

110. எண்ணுன்குஅறம்-முப்பத்திரண்டுவகை அறங்கள். ரக்ஷிக்கும் - பாதுகாக்கும். காந்திமதிப் பெண்-பார்வதி.

111. முந்திமயமான-வெண்ணுரையைப்போல வெண்மையான. சிமயவெற்பு-இமயமலே.

112. பதஞ்சலி-ஒரு முனிவர்.நிந்தையிலா-பழிப்புஇல்லாத.

113. உன் மரபு-உன்னுடைய மரபு (பணத்தின் மரபு)

114. சம்பங்கி-ஒரு தேசம்.

115. சந்தம்-வடிவு. அந்தம்-அழகு.

117. சொன்னகிரி-சொர்ணமலே.

114-ஆவது கண்ணியிலிருந்து 118-ஆவது கண்ணி வரை, பலபெயர்களில் நாணயம் வழங்கப்பட்டமை குறிப்பிடப்படுகிறது.

118. சீரங்க ராயனெனும் செம்பொன் வராகன்இவர்
பேரெங்கு மான பெரியோர்கள்,—சேர

119. உனக்குமுன்னே தோன்றும் உயிர்த்துணைவர் என்றால்
மனக்கவலை ஏதுனக்கு மன்னா ?—கனக்கும்

120. குதிரைக் குளம்பு குடிக்கெல்லாம், மூபா!
அதிகக் கிளைக்கூட்டம் ஆனாய்;—நிதியக்

121. கடவுளே! ஆங்கவர்க்குக் காவேரி கங்கைக்கு
இடையிலுள்ள தேசம் எவையும்,—அடைவில்

122. நிரைபெறுதீ வாந்தரமும், நிண்ணயமாம் ஏழு
கரைதுறையும், நீகொடுத்த காணி;—துரைமகன்நீ

123. அங்குமிங்கும் போக்குவரத் தாயிருப்பாய்; ஆங்கவரும்
இங்குமங்கும் போய்வந் திருப்பார்கள்;—உங்களிலே

124. பேதமுண்டோ? வாசல் பிரதானி புத்தனுக்கும்,
ஏதமிலா நற்பன் னிராசிக்கும்,—போத

125. மலையாள தேச மணியம் கொடுத்தாய்;
தலையாக நீயிருக்குந் தானம்,—தொலையாத

---

118. பேரெங்குமான-பெயர் எங்கும் தெரிகின்ற.

120. குதிரைக்குளம்பு-குதிரைக்குளம்பன். (ஒருவகைப் பொற்காசு). மூபா-மூத்தவனே; தலைமையானவனே.

121. அடைவில்-முறைப்படி.

122. நிரைபெறு - வரிசையாக உள்ள. தீவாந்தரம்-தீவு. நிண்ணயம்-நிச்சயம். ஏழுகரைதுறை-ஏழுகடற்கரையும், பிற நீர்த்துறைகளும். காணி-உரிமைச்சொத்து.

123. போக்குவரத்து-போய்வருதல். (போதலும் வருதலும்).

124. பேதம்-வேறுபாடு. பிரதானி-முக்கியஸ்தர். ஏதம்-குற்றம்.

125. மணியம்-மணியவேலை; விசாரணைவேலை. தானம்-இடம். தொலையாத-வளம் குறையாத.

126. தென்மதுரைச் சீமைமுதல் தென்கன்னி யூர்வரைக்கும்
தன்மதுரை நீயே சகலருக்கும்;—தொன்முறையால்
127. வல்லதுட்டு, துக்காணி, வாசல் தளகர்த்தர்;
செல்லுமற்றைக் காசெல்லாம் சேவகர்கள்;-எல்லாரும்
128. அங்கங்கே நாணயங்கள் ஆகவைத்தாய்; உன்ஆணை
எங்கெங்கே செல்லாது இறையோனே?-எங்களுக்குத்
129. தாதையும் பெற்றெடுத்த தாயும்போல் ஆதரிக்கும்
மாதைவேங்க டேசேந்த்ரன் வாசலிலே,—சீதமலர்ப்
130. பைந்தொடியாள் கூத்தாடும் பாக்யநிறை பொக்ஷ
முனக்கு
அந்தரங்க மான அரசிருக்கை;—சொந்ததலம்
131. அத்தலமே ஆனாலும், அஷ்டதிக்கும் நீயாகி
எத்தலமும் சட்டம் இடுவிப்பாய்;—கர்த்தனே!
132. கொங்கு முளையென்றும், குணுங்கலூர்
வெட்டென்றும்,
வெங்கண் அழகாத்ரி வெட்டென்றும்,—தங்குமொரு

---

126. தொன்முறை-பழையமுறை.
127-128. துக்காணி-இரண்டு தம்படி கொண்ட செப்பு நாண யம். துக்காணியை வாசல் தளகர்த்தர்களகவும், பிற காசுகளைச் சேவகர்களாகவும், இப்படி அனைவரையும் நாணயமாகவே வைத்திருக்கிறாய். உன் ஆணை-உன் கட்டளை.
129. தாதை-தந்தை. சீதம்-குளிர்ச்சி.
129-130. சீதமலர்ப் பைந்தொடியாள்-இலக்குமி. பொக்ஷம்-பொக்கிஷம்; கருவூலம். அரசிருக்கை-அரசுவீற்றிருக்கும் இடம். சொந்த தலம்-சொந்த இடம்.
131. அஷ்டதிக்கு-எட்டுத் திசை. கர்த்தன்-கடவுள்.
132. கொங்கு-ஒருதேசம்.
132முதல் 146 வரை உள்ள கண்ணிகளில், நாணயங்கள் யார்யார் பெயரால் வழங்கிவந்தன என்பது குறிப்பிடப்படுகிறது.

133. தூற்றுக் குடியான், சுழிமுல்லா வெட்டென்றும்,
வேற்றுச் சடக்கனிட்ட வெட்டென்றும்,—தோற்றுபுது

134. வெட்டென்றும், சோழியன்றன் வெட்டென்றும்,
ராமச்சந்த்ரன்
வெட்டென்றும், எம்பெருமான் வெட்டென்றும்;-
திட்டமாம்

135. மல்லன் சிகாபதியான், வாழ்குருகன் வெட்டென்றும்
வெல்லும் இராமையன் வெட்டென்றும்;-
சொல்லுமொரு

136. கொப்பரை வெட்டுக், குறுநண்டுக் கால்வெட்டு,
மெய்ப்புள காரேட்டி வெட்டென்றும்,—செப்பியமைக்

137. காட்டுவெட்டு, மத்தகிரிக் கண்டிரா யன்திருவாம்
கோட்டுமின்னல், மாற்றுக் குறைச்சலென்றும்,-
காட்டுகின்ற

138. வெந்துருகல், கோழி விழுங்கல், இருப்பூறல்,
செந்தழலில் வேம்சுத்த சேவையென்றும்,-அந்தமிலாக்

139. கள்ளன் புதுமங் கலக்குடியான் செப்பாடல்,
புள்ளறுதல், வேவல், புழுங்கலென்றும்,—
வெள்ளியிற்பொன்

---

136. கொப்பரை-கடாரம்.

இப்பகுதியில், நாணயங்களுக்கு வழங்கிவந்த பெயர்கள் கூறப்படுகின்றன.

வெட்டு, மின்னல், பூச்சு, மாற்றுக்குறைச்சல், வெந்துருகல், கோழிவிழுங்கல், இருப்பூறல், சுத்த சேவை, செப்பாடல், புள்ளறுதல், வேவல், புழுங்கல், வெள்ளியிற் பொன்பூச்சு, பணம், தேய்ச்சஉரை ஆகியவை எல்லாம் நாணயத்திற்கு வழங்கிய பெயர்களாகும்.

140. பூச்சென்றும், பூச்சைய நாய்க்கன் பணம்என்றும்,
தேய்ச்சவுரை என்றும், முழுச்செம்பென்றும்,—
வாய்ச்சபழ

141. முந்தின வெட்டென்றும், மூர்த்திசெட்டி-
வெட்டென்றும்,
விந்தை மயிலாப்பூர் வெட்டென்றும்,—சந்தேகம்

142. அச்சழிவு வீரராயன்பணம்ஆண் டான்வெட்டோடு
உச்சிதமாம் ஓசைப் பணமென்றும்,—கிச்சம்மாள்

143. தன்னுடைய வெட்டென்றும், சங்கர செட்டிபுது
மின்னலென்றும், நாகப்பன் வெட்டென்றும்,—
மன்னுகடன்

144. நஞ்சையன் வெட்டு,விச்வ நாதசெட்டி
வெட்டென்றும்,
மிஞ்சுசின்ன ராவுத்தன் வெட்டென்றும்,-அஞ்சிறுகோ

145. பாலசக்ர மென்றும், பலவுளூந்தூர்ச் சக்ரமென்றும்,
சால்புதிரு வையாற்றுச் சக்ரமென்றும்,-மேலாம்

146. திருச்சிராப் பள்ளிச் சிறுசக்ர மென்றும்,
வரிசையாய்ப் பாரில் வழங்கித்,—தெரிசிக்கும்

147. கோலம் பலவெடுத்துக் கோவே!நீ செய்யும்இந்த்ர
சாலம் பிறர்அறியத் தக்கதோ?—ஞாலமிசை

148. மேரு அணுவாக்கி விடுவாய்; அணுவையொரு
பாரமக மேருவெனப் பண்ணுவாய்;—ஈரமின்றி

---

142. உச்சிதம்-அருமையானது.
144. விச்வநாதன்-விசுவநாதன்.
145. சக்ரம்-சக்கரம்.
147. கோலம்-வடிவம். இந்தரசாலம்-கண்கட்டிவித்தை. ஞாலமிசை-உலகில்.
கோபாலசக்ரம், உளுந்தூர்ச்சக்ரம், திருவையாற்றுச் சக்ரம், திருச்சிராப்பள்ளிச் சிறு சக்ரம் ஆகியவை பணத்திற்கு வழங்கிய பெயர்களாகும்.
148. ஈரம்-அன்பு.

149. வெட்டுவாய்; வெட்டுதலை மீட்பாய்; வரிந்திறுகக்
கட்டுவாய்; கட்டும் கயிறவிழ்ப்பாய்;—கிட்டும்

150. உறவிற் பகைவிளைப்பாய்; உட்பகையாம் பண்டைக்
குறையைத் தவிர்த்துறவு கொள்வாய்;-துறைவிட்டுக்

151. காடுநா டாக்குவாய்; கண்விழித்து மூடுமுன்னே
நாடுகா டாக்குவாய்; நம்பி!நீ—தேடுங்கால்

152. வாராய்; வலிய வருவாய்;வந் தாலுமுன்பின்
பாராய்; பரிட்டவணை பண்ணுவாய்;—தோராய

153. ஓடுவதும் சொல்லாமல் ஓடுவாய்; செப்பிலிட்டு
மூடுவதும் கண்டு முடியாதே ;—தேடிப்

154. புதைத்துஇறந்து மற்றொருவன் போனால், ஒருவன்
அதைத்திறந்து பார்க்க அணுகி,-வதைத்திறஞ்செய்து

155. ஆடு பலிகொடுத்தும், அஞ்சனங்கள் போட்டும்,அதில்
பீடுபெறும் பேயைப் பிடித்தடைத்தும்,-பாடுபட்டுக்

156. கண்டாலும் கல்லாய்க், கரியாய்க் கிடப்பை உனக்கு
உண்டான சாலம்எவர்க்கு உண்டுகாண் ?—
மிண்டுபண்ணி

---

150. உறவில்-உறவினரிடத்தில்.

151. காடு நாடாக்குவாய்-காட்டை நாடாக்குவாய்.

152. வலிய வருதல்-தானாக வருதல்.

154. 'ஒருவன் புதைத்து இறந்துபோனால் மற்றொருவன்' என்று மாற்றிப் பொருள்கொள்க. வதைத்திறம்-உயிரினங்களைக் கொலை செய்தல்.

155. அஞ்சனம்-மை.

156. சாலம்-மாயவித்தை. மிண்டு-தருக்கு.

157. வெட்டி எடுத்துன்னை, வீட்டுக்குள் ளேஒதுங்கத்,
தட்டு தராசுசெப்பு தன்னிலிட்டுக்,—கட்டுடனே

158. காத்தாலும் நீஅடங்காய்; கள்ளா! வெளியில்நின்று
கூத்தாடு வாய்இதென்ன கோட்டாலை,—சித்துவமாய்

159. வாழ்வதும் உன்னுடைய வாழ்வாமே;
வாழ்வொழித்துத்
தாழ்வதும் உன்னுடைய தாழ்வாமே;-சூழ்குடித்துக்

160. கட்டப் புடவையின்றிக் கந்தையுமாய்ச் சென்று
செல்வர்
கிட்டப் பலகாலும் கெஞ்சிப்போய்,—முட்டமுட்டத்

161. தாங்குவார் அற்றுத் தடுமாறி ராப்பகலாய்
ஏங்குவார் ஏக்கமும்உன் ஏக்கமே;—ஓங்கும்

162. பணம்என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம்என்பர் கண்டாய் பெரியோய்!—இணையிலாச்

163. சாவடியும், வீடும், தலைவாச லும்சதங்கைச்
சேவடியும், மைந்தர்களும், தேவியரும்,—பாவடியிட்டு

---

158. கோட்டாலை-துன்பம். சித்துவமாய்-வளமாய்.
154-158 வரை உள்ள கண்ணிகளில் புதையல் என எடுத்து, ஏமாறுவார் நிலை கூறப்படுகிறது.

160. கந்தை-கிழிந்த பழையஆடை. முட்டமுட்ட-முழுவதும்.

161. ராப்பகல்-இரவு பகல்.

162. சென்மம்-பிறப்பு.

163. சாவடி-கிராமச்சாவடி. சதங்கை-காலணி. சேவடி-சிவந்தபாதம். பாவடியிட்டு- பா+ அடி+இட்டு= பரந்த அடியை வைத்து.

164. ஏறும் கடும்பரியும், எச்சேவை யும்சுவைகள்
ஆறும் கலந்த அமுதுணவும்,—வீறும்

165. குடவண்டி யும்சலவை கொண்டுபயில் பின்னே
தொடரும் பிலுக்கும், சுகிப்பும்,—குடையின்கீழ்

166. வீதிவலம் வந்துலவும் வேடிக்கை யும்கடுக்கன்
காதில் அசைவதுவும், கற்கட்டும்,—சீதசந்தம்

167. பூசுவதும், சப்ரமஞ்சப் பூவணையில் ஆங்காரம்
பேசுவதும், ஐயன் பெருமையே;—வீசிநிற்கும்

168. வட்ட விசிறி மருங்கசையக், கம்பளமேல்
இட்ட கொலுவோடு இனிதிருந்து,—நட்டதுட்டி

169. ஏது? குடிநிலுவை ஏது? வரியோலை
ஏது? கழிவுபிசகு ஏதென்னச்?-சோதி

---

164. கடும்பரி-விரைந்து செல்லும் குதிரை. எச்சேவையும்-சகலவிதமான வேலைகளும். சுவைஆறு-உப்பு,புளிப்பு, துவர்ப்பு, கசப்பு,இனிப்பு, உறைப்பு. வீறு-பெருமை.

165. பிலுக்கு-ஆடம்பரம். சுகிப்பு-சுகபோகம் அனுபவித்தல்.

166. கடுக்கன்-காதணி. கற்கட்டு - அரதனம் பதித்த ஆபரணம். சீதசந்தம்-குளிர்ச்சி பொருந்திய சந்தனம்.

167. சப்பர மஞ்சம்-சப்பரத் தேர்போன்ற கட்டில். ஐயன் என்ற சொல் பணத்தைக் குறிக்கிறது.

168. மருங்கு-பக்கம். கம்பளம்-இரத்தினக் கம்பளம்; (விரிப்பு). நட்டதுட்டி-நஷ்டக் கேடு.

169. குடி நிலுவை-குடிமக்கள் வரிக்கட்டியது போக, எஞ்சி நிற்கும் வரிப்பாக்கி. ஏது-யாது; (எவ்வளவு). வரியோலை - குடியிறைக் கணக்குக் குறித்த ஓலை.
கழிவு-நீக்குதல்.
பிசகு-கொசறு.

170. நிலைவிளக்கின் பக்கலிலே நின்றுகொண்டு செய்தி
சிலகணக்கர் விண்ணப்பம் செப்பப்,—பலகணக்கும்

171. நிச்சயமாக் கேட்டு நிலவரிக்குக் கால்வீசி
வைச்செழுதி விட்டபுது மானியத்தில்,—தைச்ச

172. பொறுப்புக்கு அரைவாசி, புன்செய்க்கு இரட்டி,
அறுப்புத் தொகைபோட் டதற்கு,—நறுக்கதனில்

173. உள்ளபடி கூட்டொடுக்கும் உத்தார மும்,பிசகும்
தள்,அதிலே பண்ணைநஷ்டம் தள்ளாதே;—
கொள்ளையோ ?

174. ஊர்மணியக் காரனை இங்கு உள்ளே அழையுமென்று
பேர்வழியே ரொக்கப் பிறிவெழுதிப்,—பாராளும்

175. திட்டமெல்லாம் உன்னுடைய திட்டம்; அவர்மணியச்
சட்டமெல்லாம் உன்னுடைய சட்டமே;—
அட்டவணைச்

---

170 நிலைவிளக்கு-குத்து விளக்கு. பக்கல்-அருகில். விண்ணப்பம்-வேண்டுகோள்; பணிமொழி. செப்ப-சொல்ல.

171. நிச்சயம்-உறுதி. கால் வீசி வைச்சு-காற்பங்கைத் தள்ளிவிட்டு. மானியம்-அரசர்கள் சம்மானமாகக் கொடுத்தநிலம்.

172. புன்செய்-புன்செய் நிலம். இரட்டி-இரண்டு பங்கு. அறுப்புத் தொகை-அறுவடைக் கூலி. நறுக்கு-குறிப்பு எழுதிய ஓலைத் துண்டு; சீட்டு.

173. கூட்டொடுக்கும்-கூட்டு + ஒடுக்கும் = பங்கும்அடக்கமும். உத்தாரம் - மறுமொழி. கொள்ளையோ-கொள்ளைப் பொருளோ.

174. ஊர் மணியம்- கிராமத்தில் மணியம் வேலை பார்ப்பவர். பேர்வழியே-பெயர் வாரியாக. ரொக்கப் பிறிவு--ரொக்கச் சிட்டை.

176. சீட்டுப் பதிவைத் திரும்பக்கூட் டித்துரைமுன்
கேட்டுக் கழித்ததுஎல்லாம் கிண்டிப்பார்த்து-ஏட்டுக்கு

177. இலக்காத் தொகையிட்டு எழுதியே நெஞ்சைக்
கலக்காத வண்ணங் கலக்கி,—அலக்கழிக்கும்

178. பிள்ளைமார் சற்றேஉன் பேர்கேட்கு முன்னரந்தக்
கொள்ளைஎல்லாந் தீராதோ? கோமானே!-உள்ளபடி

179. வட்டம்என்றும், நாணயத்தின் வட்டம்என்றும், எண்ணிக்கைத்
திட்டம்என்றும், முத்திரையுள் சிக்கென்றும்,—கட்டிரொக்கம்

180. சேர்க்கும் முடிப்பென்றும், சிலசில ஊர்ப்பணத்தைப்
பார்க்கில் இதுபிடிப்பார் பார்வையென்றும்,—காக்கும்

181. தடையம்என்றும், தூக்கித் தராசால் நிறுக்க
இடைகுறையுது என்றும், இலையென்றும்,— புடையிருந்து

182. நித்தமும்நோட் டக்காரர் நெஞ்சடையக் கூப்பிடுவது
அத்தனையும் உன்னுடைய ஆதாளி;—மத்தளத்தை

183. முத்தா!கொட்டு; ஆண்டி! முகவணையை வாசி;செம்பா
கைத்தாளம் போடு; கரும்பா!வா—தித்தியைக்கூட்டு

---

176. கிண்டிப் பார்த்தல்- ஆய்ந்து அலசிப் பார்த்தல்.

177. அலக்கழிக்கும்-துன்பப் படுத்தும்.

178. பிள்ளைமார்-ஒரு பட்டப் பெயர்.

179. வட்டம்-நாணயமாற்று.சிக்கு-சிக்கனமாய்.பார்வை-மதிப்பு.

181. தடையம்-தராசுத்தடை. இலை-இல்லை.

182. நோட்டக்காரர் - பணம் நோட்டம் பார்ப்பவர். ஆதாளி-படாடோபம்.

183. முகவணை-முகவுரை;(முன்னுரை).தித்தியைக் கூட்டு-இனிமையான இசையைக் கூட்டு.

184. ஆதி சரளிபாடென்று அதற்கேற் கப்பரதம்
சாதித்த பாத்திரத்தைத் தான்விட்டுப்,—போதித்த

185. பிள்ளையார் ஒத்துமுதல் பேரணியுங் கூட்டி,நயம்
உள்ள சலாம்எடுப்பில் ஒன்றெடுத்துத்,—
தெள்ளிமையாய்

186. மிக்க கவிதை விகற்பம் சிலகாட்டிச்,
சக்கணியில் ஓர்தருவும் சாதித்துத்,—தக்க

187. பதமும், அபிநயத்தின் பாவரச மான
விதமும், நயம்பிறக்கும் வேளை—முதலாளி

188. இங்கிதம்கண்டு ஐயா!மற் றெங்கே பாராக்கு,நல்ல
சங்கீத சாகித்ய சம்பன்ன!—எங்கள்இந்த்ர

189. காவையொத்த கோமானே! கன்ன! எனச்சிலபேர்
நாவசைத்துக் கெட்டிஐயா! நல்லதென்பார்;—
பாவோட்டம்

190. ஓடுவதும், நட்டுவன்மார் ஓகோ எனச்சிலர்கொண்
டாடுவதும், உன்னுடைய ஆவேசம்;—பாடுகின்ற

---

184. ஆதி-ஆதிதாளம். சரளி-ஏழு சுரங்களை ஆரோகணம் அவரோகணமாகப் பாடுதல். பரதம் - பரதநூல். சாதித்த-உறுதியாகச் சொல்லிய.

185. ஒத்து-தாளம். தெள்ளிமை-தெளிவு.

186. விகற்பம்-வேறுபாடு.சக்கணி-ஒருவகைக்கூத்து. தரு-கூத்தில் பாடும் இசை; ஒரு சந்தம்.

187. பதம்-செய்யுளடி. அபிநயம்-கைமெய் காட்டல். பாவம்-மெய்ப்பாடு. ரசம்-சுவை.

188. இங்கிதம்-இன்பம். பராக்கு-நோக்கு. சாகித்யம்-புலமை. சம்பன்னன்-நிறைவுடையவன். இந்த்ர-இந்திரன்.

189. கா-சோலை. கன்ன-கர்ண. நாவசைத்து-புகழ்ந்து சொல்லி. கெட்டி-உறுதி; சாமர்த்தியம்.

191. செந்தமிழ்ப்பாட்டு அத்தனையும் சின்னுன்பாட்
டாக்கிஇங்கே
வந்ததென்று கேட்கவொரு மன்னவரை,—அந்திபகல்
192. நெஞ்சுலைந்து பாடி நிறைவேற்றி யேஅதற்குப்
பஞ்சரத்ன மாலையென்றும், பள்ளென்றும்,—நெஞ்சுவிடு
193. தூதென்றும், கோவைத் துறைஎன்றும்,
வண்ணம்என்றும்,
ஏதென்று பேரிட்டும் என்னபலன்?—காதுண்டாய்க்
194. கேளாத புல்லரது கேட்பாரோ? நாலாறு
நாளாக வீட்டில் நடந்தலுத்து,—வேலையுண்டாய்ப்
195. பாடிய பாட்டைப் படித்தால்அப் போதிலொரு
மோடியுமாய், வேறே முகமுமாய்,—ஓடிவந்து
196. காதுக்குள் ஆரோ கசுகுசென்ருல், இத்தனையும்
ஏதுக்குஅண் ணுவி எழுந்திரும்இப்—போதைக்குப்
197. பாக்குவெற்றி லைச்செலவு பண்ணிக் கொளும்என்னப்
போக்குவிட்டு, நாலிரண்டைப் பொத்தலடைத்து,—
ஆக்கமுடன்

---

191. அந்திபகல்-இரவுபகல்.
192. நெஞ்சுலைந்து-மனம் வருந்தி.
192-193. பஞ்சரத்னமாலை, பள், நெஞ்சுவிடு தூது, கோவைத் துறை, வண்ணம் இவையெல்லாம் 96 வகைச் சிற்றிலக்கிய நூல்களைக் குறிக்கும் பெயர்கள். காதுண்டாய்-காதிருந்தும்.
194. புல்லர் - அற்பர். வேலையுண்டாய் - சந்தர்ப்பங் கிடைத்து.
195. மோடி-பிணக்கு.
196. கசுகுசென்ருல்-மெதுவாகச் சொன்னுல். ஏதுக்கு-எதற்கு. அண்ணுவி-ஆசிரியர்; புலவர்.
197. போக்குவிட்டு-போகவிட்டு.

198. அண்ணுவி வந்தால் அதற்கேற்க வேபரிசு
பண்ணுத சென்மம் என்ன பாழ்சென்மம்,—மண்ணுன
199. தொல்லேவந்து சூழ்ந்ததுஎன்னச் சொல்வதுதான் ஆச்சுஇனி
நல்லதென்று மெள்ள நழுவிவிட,—வல்லமையும்
200. கொஞ்சத் தனமாகிக், குத்தாமற் குத்துண்டு,
நெஞ்சத் துயரமொடு நெட்டுயிர்த்துப்,—பஞ்சத்தில்
201. பிள்ளேவிற்பார் போலப் பிரபந்தம் விற்றலேயும்
கொள்ளேமுற்றும் உன்னேக் குறித்ததன்ருே?— விள்ளரிதாம்
202. இந்திர சாலவித்தை, ஏற்பதொரு நோக்குவித்தை,
மந்திர வாள்வித்தை, வாகடமாம்—அந்தவித்தை,
203. செப்பிடு வித்தை, செலஸ்தம் பனவித்தை,
தப்புவார் அக்கினி ஸ்தம்பவித்தை,—ஒப்பிலா

---

198. பரிசு பண்ணுத-பரிசு கொடுக்காத.

199. தொல்லே-துன்பம். வல்லமை-வல்லபம்.

200. கொஞ்சத்தனமாகி - கொஞ்சமாகி (குறைவாகி). நெட்டுயிர்த்து-பெருமூச்சு விட்டு,

120. பிரபந்தம்-பாமாலே. உன்னேக் குறித்ததன்ருே-பணமாகிய உன்னேக் குறித்தேயாகும். விள்ளரிதாம்-சொல்லுதற் கரியதாம்.

202. இந்திரசால வித்தை-இல்லாததை உள்ளதுபோல் காட்டும் கண்கட்டி வித்தை. நோக்குவித்தை-ஒரு வகைத் தந்திர வித்தை. வாகடம் - வைத்திய சாஸ்திரம்.

203. செப்பிடுவித்தை - செப்புவித்தை. செலஸ்தம்பன வித்தை-தண்ணீரை அசைவற்று நிறுத்தும் வித்தை. அக்கினி ஸ்தப்ப வித்தை-நெருப்பை நிலேநிறுத்தும் வித்தை.

204. வாயுஸ்தம் பிக்கும் மகாவித்தை, மிக்கசம்ப்ர
தாயத்தில் ஏற்றுதனு சாஸ்திரவித்தை,—காயத்தில்

205. வேஷங்கள் போடும் விநோதவித்தை, ஆத்மவதைத்
தோஷங்கள் எண்ணாத சூன்யவித்தை,—பூஷணமாய்க்

206. கூத்தாடிக்கு ஏற்ற கொடியவித்தை, சொன்னபடி
ஆஸ்தானத் தேகுரங்கை ஆட்டுவித்தை,—ஏத்தரிய

207. காருட வித்தையும்நீ கற்பித்த வித்தையல்லால்
ஆருடைய வித்தைசொல்லாய்? அப்பனே!-பேருடைய

208. வங்காளம், ஈழம், மலாக்கா, பிரதிக்கா,
பங்காளம், கோவையொடு, பைகோவை—அங்குள்ள

209. அச்சிசென்ன பட்டனத்தோடு, ஆனதொரு வத்தாவி,
கொச்சி,கொல்லம், மன்னார், கொழும்புமுதல்—
இச்சைபெறு

---

204. வாயுஸ்தம்பிக்கும் மகாவித்தை-காற்றை நிறுத்தும் வித்தை. சம்ப்ரதாயம்-சாதுரியம். தனு சாஸ்திர வித்தை-வில்வித்தை. காயம்-உடம்பு.

205. விநோத வித்தை-வேடிக்கையாய்ப் பொழுதுபோக்கும் வித்தை. ஆத்மவதைத் தோஷங்கள்-உயிர் வதைக் குற்றங்கள். சூன்யவித்தை-மந்திரத்தால் கொல்லும் பொய்க்கொலை வித்தை.

206. ஆஸ்தானம்-இராச சபை. ஏத்தரிய-புகழ்தற்கரிய.

207. காருட வித்தை-64 கலைகளாகிய வித்தை.

208. ஈழம்-சிங்கள தேசம். மலாக்கா-மலாயாதேசம். பங்காளம்-ஒரு தேசம். கோவை-கோவா என்ற பட்டினம். பைகோவை-ஒரு தேசம்.

209. அச்சி-ஒரு தேசம். மன்னார்-தலைமன்னார். இச்சை-விருப்பம்.

4B / 9 76

210. சீனமொடு, நற்பம்பை, தென்கன்னி யாகுமரி,
கானமிகு யாழ்ப்பாணம், கற்பாடி,—ஏனையுள்ள

211. கிட்டாத நீர்க்கொழும்பு, கீழ்மாத்தூர், காலி,பின்னும்
எட்டாத தீவுகள் எங்கும்போய்,—முட்டிவந்து

212. கப்பல் முறிக்கும் கடலின்மீ னுக்குஒதுங்கித்
தப்பி, இடறுசில தான்தப்பி,—அப்புறம்போய்

213. ஆனாலும் ஆச்சுது அரியோ கரியென்று
போனாலும் போச்சுதுஇந்தப் பொய்யுடல்தான்—
வானளவு

214. தாவுகடற் பள்ளம் தனிலோர் சிராயைநம்பிப்
போவதுவும் உன்றன் பொருட்டன்றே ?—காவலனே !

215. மாயரச வாத மயக்கம் பிடித்தமுழுப்
பேயர்அதி லேமனது பேதித்துத்,—தீமுகத்தில்

216. நிற்க ரசத்தை நிறுத்துவராம்; பாஷாண
வர்க்கமெல்லாம் கட்ட வகைவருமாம்;—
பொற்குணம்போல்

---

210. பம்பை-பாம்பன். காலி-இலங்கையில் உள்ள ஓர் ஊர்.

211. தீவு-நாற்புறமும் நீர்சூழ்ந்துள்ள திட்டு. முட்டி வந்து-வந்துமுட்டி. (வந்துமோதி).

212. இடறு-துன்பம்.

214. தாவுகடல்-அலை தாவும் கடல். சிராய்-மரச்சிராய்; (மரத்துண்டு.)

215. மாயம்-பொய். ரசவாதம் இரும்பைப் பொன்னாக்குதல். பேதித்து-மாறுபட்டு. தீமுகத்தில்-நெருப்பில்.

216. பாஷாணவர்க்கம்-நச்சுச் சரக்கு.

217. காரம் சிவந்துவரக் கண்டாராம், அப்படிச்சவ்
வீரம் சிவந்து மெழுகாமாம்;—ஈரம்போய்

218. வங்கம் வலிய மருந்தறிவா ராம்;சாதி
லிங்கம் குவளை இறங்குமாம்;—அங்கே

219. இரும்பிலே ஈயம் எடுக்க மருந்துண்டாம்;
திரும்பியொரு மூலிகையிற் செம்பாம்;—துரும்புமுதல்

220. சொன்னமாம்; என்றுமுன்னோர் சொல்லியதாம்; கந்தகத்தை
வன்னம்மா ருத்தயிலம் வைப்பாராம்;—பொன்னிமிளை

221. தொட்டி அரிதாரம், துத்தநா கம்,துரிசு,
கட்டிநவச் சாரம், கருப்பூரம்,—பெட்டிலுப்பு,

222. வீட்டுப்புஇந் துப்பு, வெடியுப்பு டன்வளையல்
ஓட்டுஉப்போடு ஐந்துப்பும் நன்ருகக்—கூட்டிஅதைச்

223. செப்பமுடன் சேர்ந்துருகச் செம்பு களிம்பறுமாம்;
அப்பிரகத் தேரசமுண் டாக்குவராம்;—இப்படியே

---

217. களரம்-பொன். சவ்வீரம்-ஒரு மருந்து.

218. வங்கம்-ஈயம்; வெள்ளி. சாதிலிங்கம்-ஒரு சரக்கு. குவளை-ஒருவகைப் பாத்திரம்.

219. மூலிகை-மருந்துப்பூடு. துரும்பு-அற்பமான பொருள்.

220. சொன்னமாம்-சொர்ணமாம் (பொன்). கந்தகம்-ஒரு மருந்து. வன்னம்-நிறம். பொன்னிமிளை-பொன்னி நிமிளை (அம்பரை).

221. அரிதாரம்-பொன்னரிதாரம். துத்தநாகம்-ஒன்பது உலோகப் பொருள்களில் ஒன்று. துரிசு-துத்தம். நவச்சாரம்-ஒருமருந்து.

223. களிம்பறும் துரு நீங்கும். அப்பிரகம்-ஒருவகைக் கல்.

102305

224. ஒவ்வொருவர் ஒவ்வொன்றை உன்னி, இராப்பகலாக்
கவ்வை பிடித்துஇதுவே கங்கணமாய்—அவ்வவர்தம்

225. வீட்டிலுள்ள தட்டுமுட்டு விற்றும்,ஆற் ருதுமனே
யாட்டிதனை விற்றும், அதற்கேற்க—நாட்டிலுள்ள

226. கட்டுசரக் கெல்லாம் கடையிலே வாங்கி,அதில்
மட்டறப்பூஞ் சாராயம் வார்த்தரைத்துத்,-தட்டும்

227. எருவிற் புடம்போட்டு எடுத்தபின்பு, முட்டைக்
கருவிட்டு அரைந்துக் கழுவிப்,—பருவமதாய்

228. வாய்விரிந்த தாழிக்குள் வைத்துச் சிலசாமம்
தீயெரிந்து காய்ந்து சிவக்கையிலே,—பேய்முசுட்டைச்

229. சாறும்கை யாந்தகரைச் சாறும்பொன் ஞங்கண்ணிச்
சாறும், பசுந்தும்பைச் சாறும்விட்டு—ஏறச்

230. சுருக்குக் கொடுத்துஅதைச்சிந் தூரித்துச், செம்பை
உருக்கித் தெளியுமட்டும் ஊதிப்,—பெருக்கமுடன்

231. சொன்ன வயிரவன்பேர் சொல்லிஅந்தச் சிந்தூரம்
தன்னைஅதிற் போட்ட சமயத்தே,—என்னவோ?

---

224. உன்னி-நினைத்து. கவ்வை-துன்பம்.கங்கணம்-உறுதி.

225. தட்டுமுட்டு-தட்டுமுட்டுச் சாமான்கள்.

226. மட்டற-அளவில்லாமல். வார்த்து-ஊற்றி.

227. புடம்-உலோகங்களைச் சுத்தி செய்தல்.

228. வாய்விரிந்த-வாய் அகன்ற. தாழி-குடம்.
சாமம்-ஏழரை நாழிகை (மூன்றுமணி நேரம்).
பேய் முசுட்டை-முசுட்டை வகைகளில் ஒன்று.

229. கையாந்தகரை-கரிசாலைப்பூடு. ஏற-நன்ருக.

230. சுருக்குக் கொடுத்து-சுருங்கவைத்து. சிந்தூரித்து-சிந்தூரமாக்கி.

O-,18N,P
N61

232. வன்னம் சிவக்கும்அதை மாற்றினல் என்றுகண்டு,
சொன்னம் சரிகூட்டித் தொந்தித்துப்,—பின்னை அதில்

233. வங்கத்தைக் குத்திவிட, வங்கமும்போய், முன்சொன்ன
தங்கத்தை யும்கெடுத்துத் தாழ்ச்சியாய்,—அங்கே

234. கரிகொண்ட காசுமுதல் காணுமோ? வீணே
அரிகண்ட மாய்க்கிடக்குது ஐயோ!—அரிகண்டா!

235. இவ்வாறு கெட்டவர்கள் எண்ணிறந்த கோடி;
உன்னைச்
செவ்வாகக் கண்டவரோ? சீமானே!—அவ்வளவோ?

236. மண்ணாசை, பெண்ணாசை, மற்றுமுள்ள ஆசையெல்லாம்
ஒண்ணாது எனவெறுத்த யோகியர்கள்—பண்ணுதவ

---

232. வன்னம்-நிறம். சொன்னம்-பொன். தொந்தித்து-கலக்கி.

233. வங்கம்-ஈயம்; வெள்ளி. குத்திவிட-அடக்க. தாழ்ச்சியாய்-தாழ்வடைந்து.

234. கரிகொண்ட காசு-கரியாய்ப்போன காசு. அரிகண்டம்-கழுத்தரியப்பட்ட முண்டம். அரிகண்டா-கழுத்தரிகின்றவனே. (பணத்தைக் குறிக்கிறது).

235. செவ்வாக-செம்மையாக. அவ்வளவோ-அவ்வளவு தானே.

215 முதல் 235 வரை உள்ள கண்ணிகளில், பணத்தாசை பிடித்து இரும்பைப் பொன்னுக்க எண்ணி, இரசவாத வித்தைகளில் ஈடுபட்டுக் கெட்டவர்களின் நிலை கூறப்படுகிறது.

236. ஒண்ணாது-கூடாது.

237. மாண்புடையோர், ஒன்றான வஸ்துவைக்கண்
டாலும்உன்னைக்
காண்பதிலே ஆசை கணக்குண்டோ? வீண்பொழுது

238. போகாதென்று உன்னைப் புறம்பாக் கடன்கொடுத்து
வாகா நியாயவட்டி வாங்காமல்,—ஆகாத்

239. தினவட்டி வாங்கும்அந்தச் சீர்கேடர், சற்றுஉன்
மனதிற் குறிப்பறிய மாட்டார்;—தனதாய்நீ

240. வைத்தவட்டி தப்பாமல் வாங்கிக் கொடுப்பதிலே
மெத்தமகிழ்ந்து, உன்மேல் விருப்பமுற்று,-நித்தவட்டி

241. கட்டளையாய் உண்டுஉடுக்கக் காணுமே, கைம்முதற்கு
நட்டமில்லை என்று நடக்கும்நாள்,—வட்டியிலே

242. தாழ்ந்துகொள்வாய், அப்பால் தறுகிமுத லும்கூட
வீழ்ந்துகொள்வாய் நல்ல விளையாட்டு;—
வாழ்ந்திருக்கும்

243. கொற்றவர்தாம் என்றுசிலர் கொத்துச் சரப்பணியும்,
சற்றும்மறு வில்லாச் சவுக்களியும்.—வெற்றிபெறும்

---

237. ஒன்றானவஸ்து - ஆண்டவன். ஆசைக்கணக்குண்டோ-ஆசைக்கு அளவுண்டோ.

238. புறம்பா-புறத்தாரிடம். வாகா-முறையாக.

239. சற்று-கொஞ்சம்.

240. மெத்த-மிகவும்.

242. தாழ்ந்துகொள்வாய்-தங்கி மந்தப்பட்டு விடுவாய். தறுகி-தடைப்பட்டு. முதல்-அசல்தொகை.

243. கொற்றவர்-அரசர். கொத்துச்சரப்பணி-ஓர் ஆபரணம். மறு-குற்றம். சவுக்களி-ஓர் ஆபரணம்.

244. அஸ்த கடகம், அதிசவிலே மோதிரமும்,
இத்தனையும் பூட்டி இறுமாந்து,—முத்துவடக்

245. கண்ட சரமும் கழுத்துமாய், ஏறிவரும்
தண்டிகையும், போர்த்திட்ட சாலுவையும்,—
ஒண்டரிகக்

246. காரர்களும், வல்லயமும், கர்ச்சிதரா வுத்தர்களும்,
ஏறுகுதி ரைப்பவுஞ்சும், யானைகளும்,—கூறுகின்ற

247. கட்டியமும், காளாஞ்சிக் காரர்களும், யானையின்மேல்
கொட்டிய டம்மார கோஷ்டிப்பும்,—எட்டிய

248. பூரிகை நாக சுரமும், புடைநின்று
காரிகையார் வீசும் கவரிகளும்,—பாரினடை

249. தம்பட் டமும்அவர்கள் தம்பட் டமும்உனது
கண்பட்ட வாழ்வலவோ? **கண்ணா!**—கும்பிட்டேன்

---

244. அஸ்த கடகம்-கைவளை. இறுமாந்து-செறுக்கி.

245. கண்டசரம்-கழுத்தில் அணியும் ஒருவகை ஆபரணம். தண்டிகை-பல்லக்கு. சாலுவை-மேலங்கி. ஒண்டு-ஒதுங்கி. அரி-ஈர்வாள்.

246. வல்லயம்-ஈட்டிவகை. கர்ச்சிதம்-முழக்கம். குதிரைப் பவிஞ்சு-குதிரைப் படைவரிசை.

247. கட்டியம்-எச்சரிக்கை. காளாஞ்சி-தாம்பூலம் முதலியன. கொட்டிய-முழக்கிய. டம்மாரம்-முரசம்.

248. பூரிகை-ஊதிடும் பூரிகை. புடை-பக்கம். காரிகை-பெண். கவரி-சாமரை.

249. தம்பட்டம்-ஒரு பறை. தம்பட்டம்-தம்+பட்டம்=தங்களுடைய ஆதிக்கப்பெயர்.
உன் கண்பட்ட வாழ்வு-உன்னுடை கண்பார்வையால் உண்டாகிய வாழ்வு.

250. வேலைநெடு ஞாலத்தின் மெல்லியர்க்கெல்
லாம்கழுத்தில்
மாலையிட வந்தமண வாளனே !—சோலிபண்ணிக்

251. காதலரைத் தப்பிப்போய்க் கள்ளப் புணர்ச்சிசெயும்
கோதையருக்கு ஆசைக் கொழுநனே!—பேதைதனில்

252. வாங்குதிரு வாங்கி மறுகளவு பார்த்திருக்கும்
ஆங்கவர்தம் கள்ளமுறைக்கு அண்ணனே!—ஓங்குகுலம்

253. தம்தரத்துக்கு ஒவ்வாது தாழ்ந்தகுலம் ஆனாலும்
வந்தெடுத்துப் பெண்கொடுக்கும் மாமனே !—
நொந்துமெத்தக்

254. கெட்டவன்கீழ்ப் பெண்டிருக்கும் கிள்ளைமொழி
யாள்வலிய
வட்டமிடுங் கைச்சரச மச்சானே !—நட்டணைசேர்

255. கூத்திமா ரோடிருந்து கோட்டிகொள்ள நாலிரண்டு
பேத்திமார் உண்டுபண்ணும் பேரனே !—நாத்திருந்த

---

250. வேலை-கடல். ஞாலம்-உலகம். மெல்லியர்-பெண்கள். சோலி-காரியம் (செயல்) மணவாளன்-மாப்பிள்ளை.

251. ஆசைக்கொழுநன்கள்ளக்காதலன். பேதைதனில்-அறியாமையில்.

கள்ளமுறைக்கு-களவு முறைக்கு. ஓங்கு குலம்-உயர்ந்த குலம்.

253. நொந்து-வருந்தி. மெத்த-மிகவும்.

254. கிள்ளை-கிளி. கைச்சரசம்-இன்ப விளையாட்டு. மச்சான்-மைத்துனன். நட்டணை-எண்ணுமை.

255. கூத்தி - நாடகக் கணிகை. கோட்டிகொள்ள - உரையாட. நாத்திருந்த-சொல்திருந்த. (நா-நாக்கு) இங்கு சொல்லைக் குறித்து நிற்கிறது.

256. ஓது கலைஞானம் உள்ளதெல்லாம் கற்றுநன்ருச்
சாதிக்க வைக்குந் தகப்பனே!—பேதிக்கப்

257. போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறூட்டும் மாதாவே !—
பேய்க்குணங்கள்

258. ஆனாலும் காமன்எனும் அண்ணனுக்குச்
சொன்னவண்ணம்
தானகப் பாடுபடும் தம்பியே !—தேனுரும்

259. பூங்குழலாள் வீட்டில் பொழுதுடனே தூதுசெல்லும்
பாங்கனுக்கு முன்புசெல்லும் பாங்கனே !—நீங்கரிய

260. காட்டிலே போய்க்களவு காட்டாமல், வெட்டுமர
மூட்டிலே தீவெளிச்சம் மூட்டாமல்,—கூட்டமிட்டுக்

261. கைவேலிக் குள்ளே கலையாமல், மாவுத்தர்
நெய்வேல் எடுத்ததட்டி நில்லாமல்,—மெய்பிணேக்கும்

262. சோட்டானை இல்லாமல், தோகைமார் கும்பமுலைக்
கோட்டானை வந்துவிழும் கொப்பமே !—நாட்டிலுள்ள

---

256. ஓது-கற்கின்ற. சாதிக்க வைக்கும்-வெற்றிபெற வைக்கும். பேதிக்க-வேறுபடுத்த.

257. கானம்-காடு. மாதா-தாய்.

258. தேனுரும்-தேன்நிறைந்த.

259. பாங்கன்-தோழன்.

260. மரமூட்டு-மரத்தினது பொருத்து (முடிச்சு).

261. மாவுத்தர்-யானைப்பாகர். நெய்வேல்-நெய்பூசியவேல். மெய்-உடம்பு.

262. சோட்டானை-சோடு+ஆனை. சோடு-இணை. தோகைமார்-பெண்கள். கோட்டானை-கோடு+ஆனை. கோடு-கொம்பு. கொப்பம்-யானை படுகுழி.

263. சித்தர்கள் கூடிச் செபியாமல், ஆங்கவர்தம்
புத்திரர் ஏதோ புலம்பாமல்,—மொய்த்துநிற்கும்

264. ஆளரவம் இல்லாமல், ஆயிழையார் அல்குல்எனும்
வாளரவம் உள்ளாக்கும் மந்திரமே!—நீளஒரு

265. மூங்கிற் கழியில் முடிந்தகயிறு இல்லாமல்,
தூங்கச் சிறியஉண்டை தூக்காமல்,—நாங்குழுவை

266. வள்ளுகிரால் எற்றுமல், மாதர் சிறுகணைக்கால்
துள்ளு வராலிழுக்குந் தூண்டிலே!—கள்ளுண்ணத்

267. தேன்மறுகி வீழும் செறிகுழலார் கள்ளவிழி
மான்மறுகி வீழும் மணிவலையே!—தான்மறுகி

268. அங்குஒலியல் சூடிநிற்கும் அன்னநடை யாரிடத்தில்
சங்குஒலிஉண் டாக்கும் தடாகமே!—துங்கமுலைக்

---

263. சித்தர்-அஷ்டசித்தி அடைந்தோர். மொய்த்து-நெருங்கி.

264. ஆளரவம்-ஆள்நடமாடும் ஓசை. ஆயிழையார்-பெண்கள். அல்குல் - பெண்குறி. வாளரவம்-வாள்+அரவம்; ஒளிபொருந்திய பாம்பு (பாம்பின் படம்).

265. கழி-கொம்பு. தூங்க-தொங்க. சிறிய உண்டை-சிறிய உருண்டை நூல். நாங்குழு-மண்புழு.

266. வள்ளுகிர்-கூரியநகம் (கணைக்காலாகிய வரால் மீனை இழுக்கும் தூண்டில்). கள்ளுண்ண-தேன் உண்ண.

267. தேன்மறுகி-வண்டு சுழன்று. செறிகுழலார்-செறிந்த கூந்தலையுடைய மகளிர். விழிமான்-விழியாகிய மான்.

268. ஒலியல்-பூமாலை. அன்னநடையார்-பெண்கள். தடாகம்-குளம். துங்கம்-உயர்ந்த (சிறந்த).

269. குன்றணைந்த மின்னார் கொடியிடையாம் சிங்கத்தைச்
சென்றணைந்து தூக்கிவரும் சிம்புளே!—வென்றிவிழி

270. மாவடுவை ஒப்பார் மனதில்அபி மானம்எனும்
காவல் அழிக்குமத கைக்களிறே!—பாவையரில்

271. பேசுமவு னம்பிடித்துப் பேசாதார் வாய்க்குமுத
வாசமல ரைத்திறக்கும் மாமதியே!—ரோசமுடன்

272. முந்தானை போர்த்து முலைப்பாற் கவிழ்ந்தமுகச்
செந்தா மரைமலர்த்தும் செங்கதிரே!—இந்துவைநேர்

273. நெற்றிமட மின்னார் நிதம்பத் துகில்குலையச்
சுற்றி அடிக்கும் சுழல்காற்றே!—பற்றியொரு

274. தட்டுடுத்த சேலையுமாய்த் தையல்நல்லார் ஓடிவர
வட்டமிட்டுப் பெய்யுமழை மாரியே!—ஒட்டம்இட்டு

---

269. குன்று-மலை. மின்னார்-மின்னல் போன்ற பெண்கள். கொடியிடை-கொடிபோன்ற இடுப்பு. சிம்புள்-எட்டுக்கால் பறவை.

270. விழி-கண். மாவடு-மாம்பிஞ்சு. அபிமானம்-உயர்ந்த குணம். மதம்-மதநீர். பாவையர்-மகளிர்.

271. வாய்க் குமுதம்-வாயாகிய குமுதமலர். ரோசம்-மானம்.

272. முந்தானை-சேலைத்தலைப்பு. முலைப்பால் கவிழ்ந்து-தனம் நோக்கித் தலைகுனிந்து (அஃதாவது கீழ் நோக்கியவாறு தலைகுனிந்து). செங்கதிர்-சூரியன். இந்துவை நேர்-சந்திரனைப் போன்ற.

273. மின்னார்-பெண்கள். நிதம்பம்-பெண்குறி. துகில்-சேலை.

274. தட்டுஉடுத்தசேலை-தட்டுவைத்து உடுத்திய சேலை. தையல்நல்லார்-பெண்கள். ஒட்டம் இட்டு-பந்தயம் வைத்து.

275. வெட்டிவெல்லக் கூடா வினையை, அரைநாழிகைக்குள்
கட்டிவெல்லக் கச்சைகட்டும் காவலா!—இட்டமுடன்

276. ஊரெல்லாம் சுற்றி ஒருவிடத்தும் தங்காமல்
பாரெல்லாம் சுற்றிவரும் பக்ஷியே!—நேரிலே

277. மட்டுப் படாமல் மதமாய் ஒருத்தருக்கும்
கட்டுப் படாக்கொடுவைக் காளையே!—முட்டாளாய்ப்

278. புந்தியில்லார் ஆனாலும் புந்தியெல்லாம் தந்து,கன
தந்தியெல்லாம் உண்டாக்கும் தாஷ்டிகா!—முந்திநீ

279. எவ்வளவுஉண் டாயிருந்தாய் என்றாலும் அவ்வளவுக்கு
அவ்வளவு வீறுபண்ணும் ஆங்காரா!—செவ்வியர்பால்

280. நூற்றுவரைக்கு உண்டானால் நூறிருநூறு
ஆகிஅப்பால்
ஆற்றுவரத் தாப்பெருகும் ஐயனே!—வேற்றுமொரு

---

275. வினையை-செயலை. வெல்ல-வெல்வதற்கு. கச்சை-அரைக்கச்சை. இட்ட முடன்-விருப்பமுடன்.

276. பக்ஷியே-பறவையே.

277. மட்டுப்படாமல்-அளவுபடாமல். மதமாய்-செருக்குடன். கொடுவைக்காளை – துஷ்டத்தனமுள்ள காளை.

278. புந்தி-புத்தி. கனதந்தி-பெரியயானை. தாஷ்டிகா-சாமர்த்தியம் உடையவனே. முந்தி-முதலில். ஆங்காரா-அகங்காரம் உடையவனே. செவ்வியர்பால்-நேர்மையானவரிடத்தில்.

280. ஆற்று வரத்தா-ஆற்று நீர் வருவதைப் போல.-வேற்றுமொரு-வேறொரு.

281. வஞ்சகம் இன்றி மதுரைவழி ஓலைபிடித்து
அஞ்சலிலே ஓடி அலைவாரும்,—பஞ்சமோ ?

282. ந்யாயத் தொழிலைவிட்டு நட்டநடுக் காடுதொறும்
ஆயத் துறைகாத்து அலைவாரும்,—காயத்தில்

283. நூலைத் தரித்திருந்தும் நூறுமலை ஏறிநித்தம்
சேலைச் சுமடு சுமப்பாரும்,—ஏலமலைக்

284. கல்லடித்து வீழ்த்துக் கடவுளர்தம் ஆலயத்தைச்
செல்லுமிடம் கல்லிட்டுச் செய்வாரும்,—சல்லிகளை

285. மாறுஎடுத்துத் தூர்த்தும், மரம்அறுத்தும்,
செங்கலுக்கு
நீறுஎடுத்தும், முட்டாளாய் நிற்பாரும்,—கூறுவதுஎன்?

286. ஆர்க்கும்உயிர் மேல்ஆசை ஆனாலும் எண்ணாமல்
போர்க்குவினை யத்தலத்தில் போவாரும்,—
பார்க்குங்கால்

287. நாளிற் குறையேற்றி ஞால்ஒருவன் ஏறிவரத்
தோளிற் சிவிகை சுமப்பாரும்,—நாளிட்டுச்

---

281. அஞ்சல்-தபால்.

282. ந்யாயத் தொழில்-நீதியுடன் கூடிய தொழில். ஆயத் துறை சுங்கச்சாவடி. காயம்-உடம்பு.

283. சுமடு-சுமை.

284. சல்லிகளை-உடைந்ததுண்டுகளை.

285. மாறு-கூட்டுமாறு. தூர்த்தும்-கூட்டியும். நீறு-புழுதிமண்.

286. ஆர்க்கும் - யாருக்கும். பார்க்குங்கால் - ஆராய்ந்து பார்க்கும் பொழுது. சிவிகை-பல்லக்கு. வினையத்தலம்—போர்க்களம்.

288. சோற்றுக்கு அரைக்கால்கால் என்று
தொகைவகையோடு
ஏற்றிப் பணச்சோறு இடுவாரும்,—காற்றுக்கும்

289. வெய்யிலுக்கும் அஞ்சாமல் வேற்றூரில்
கொண்டுவிற்றுப்
பைமுதற்கு மேல்வரத்துப் பார்ப்பாரும்,—கைசலிக்க

290. அங்காடி விற்றும் அரிப்பரித்தும் கால்பாதி
தொங்காதோ என்று சுழல்வாரும்,—தங்காமல்

291. ஒற்றை மரம்ஏறி ஒலிகடலில் மீன்பிடித்து
விற்று நரகில் விழுவாரும்,—பற்றிநடந்து

292. ஆராகி லும்கொடுத்தால் ஆலிங் கனதானம்
சோராமல் வாங்கத் துணிவாரும்,—ஒரொருவர்

293. வல்லமைகள் சொல்வதென்ன? மானிடர்எல்
லாம்உன்னை
அல்லது,தே டும்பொருள்ஏது ஆண்டவனே?—
சொல்லக்கேள்

294. மாயப் பிரபஞ்சமெல்லாம், வாவா! உனதுசம்ப்ர
தாயப் பிரபஞ்சமிது சத்தியமே;—போய்அப்பால்

---

289. பைமுதற்கு-பையில் உள்ள அசலுக்கு. மேல்வரத்து-மேல்வருமானம்,

290. அங்காடிவிற்றும் - கடைத்தெருவில் பண்டங்களை விற்றும்.
அரிப்பரித்தும்-மண்ணை அலசிப் பொன்னை எடுத்தும் தொங்காதோ-தங்காதா என்று. சுழல் வாரும்-மறுகு வாரும்.
ஒற்றை மரம்-தனி மிதப்பு மரம்.

292. ஆலிங்கனம்-தழுவுகை, சோராமல்-தளராமல்.

294. பிரபஞ்சம்-உலகம். சத்தியம்-உண்மை.
சம்ப்ரதாயம்-பாரம்பரியம். வவா-தகப்பனே

295. ஆருடனே சொல்வதுஉன்னை அல்லாமல் காமநலம்
சீருடனே இன்பம் செனியாதே;—பேரழகில்

296. சீவகனே ஆகிலும்நீ சேர்ந்திரா யாகில்ஒரு
பாவையரா னாலும்முகம் பார்ப்பாரோ ?—வாவா!உன்

297. வீட்டிலே நான்வரத்தான் வேளைகிடை யாதோ?சீ
மாட்டிபேசு என்றாலும் வாய்திறவாள்;—கேட்டால்

298. ஒருத்தலை நோவாம்; உடம்பு சுரத்தால்
வருத்தமாம்; காதில் வலியாம்;—பொருத்துஎல்லாம்

299. கட்டுவிட்டுக் கால்கை கடுக்குதாம்; சந்தியிற்பேய்
தொட்டுவிட்ட தாலே துவளையாம்;—விட்டுவிட்டுக்

300. காயுதாம்; அத்தோடே கண்நோக்கா டாம்,வயிற்றில்
வாயுவாம்; நீர்ப்பாடு வந்ததாம்;—தாயார்க்குப்

301. பித்தமாம்; வாந்தி பிராந்தியாம்; ஆயாசம்
மெத்தவாம்; செவ்வாய்க்கும் வெள்ளிக்கும்—
சுத்தமாம்;

---

295. செனியாது-தோன்றாது.

296. சீவகன்-ஓர் அரசன். பாவையர்-பெண்கள்.

297. வேளை - நேரம்.

298. ஒருத்தலை நோவு-ஒருத்தலைவலி. சுரம்-காய்ச்சல். பொருத்து—மூட்டு.

299. கட்டு-இணைப்பு. சந்தி-பல வீதிகள் சந்திக்கும் இடம் துவளை-வருத்தம்.

300. காயுதாம் - சுரம்அடிக்கிறதாம். அத்தோடே - அத்துடன். கண் நோக்காடு—கண் வலி. வாயுவாம்-வாய்வுத் தொந்தரவாம். நீர்ப்பாடு-நீரிழிவு.

301. வாந்தி-வாந்தி எடுத்தல். பிராந்தி-மயக்கம். ஆயாசம்-இளைப்பு.

302. மற்றொருவர் கிட்ட வரப்படா தாம்,தெய்வக்
குற்றமாம்; உண்மருந்து கொண்டாளாம்;—சற்றல்ல

303. பத்தியமாம்; ஆரோ பணயம் கொடுத்ததுஒரு
முத்துவண்ணச் சேலையாம்; முந்தியாம்?—
மெத்தவஞ்சம்

304. விள்ளுவது நீயில்லா வேளையில்அந் நீலியர்க்குக்
கொள்ளை விளைவதென்ன கொஞ்சமோ?—வள்ளலே!

305. மூக்கறையர் ஆனாலும், மொண்டிகுருடு ஆனாலும்,
ஆக்கமுள்ள சாதிஇழுக்கு ஆனாலும்,—நோக்கமுடன்

306. கண்ணார உன்னைஅங்கே கண்டுவிட்டால், இங்குவர
ஒண்ணாதோ? கூத்திமார் ஒட்டாரோ?—பெண்ணரசி

307. மாப்பிளைநீர் என்று மதனிமார் வாராரோ?
கூப்பிடென்று மாமிமார் கூறாரோ?—மூப்பாயி

---

302. உண் மருந்து – உண்ணுகின்ற மருந்து. உள் + மருந்து-உள்ளுக்குள் மருந்து. சற்றல்ல-கொஞ்சமல்ல.

303. பணயம்-ஈடாகக் கொடுக்கும் பொருள். முந்தியாம்-முதலில் தந்து விட்டாராம்.

304. விள்ளுவது-பேசுவது. நீயில்லா வேளையில்-பணமில்லாத சமயத்தில். நீலி-கொடியவள்.

305. மொண்டி-நுடம். ஆக்கம்-செல்வம்.

306. உன்னை-(பணமாகிய) உன்னை. வர ஒண்ணாதோ-வரக்கூடாதோ.

307. மதனி-மைத்துனி. (கொழுந்தி).

308. பார்க்கவந்தாற் போலஒரு பக்கத் திருந்துஉடம்பு
வேர்க்குதெனப் பேத்திமார் வீசாரோ ?—ஏற்கையுடன்

309. மிக்கசிறு பாக்கும் வெற்றிலையும் தான்சுருட்டித்
தக்க கொழுந்திமார் தாராரோ ?—அக்கணமே

310. நோய்எங்கே போமோ ? நொடிக்குமுந்திக்
கொல்லும்அந்தப்
பேய்எங்கே போமோ ? பெருமானே !—நாயகிமார்

311. கூச்சமுமாய்ச், சற்றே குணலையுமாய்க், கொஞ்சுதலைப்
பேச்சுமாய்ப், போர்த்த பிடவையுமாய்,—
வாய்ச்சதொரு

312. பாடகமும் காலுமாய், பாக்குஒதுக்கும் கையிலிட்ட
சூடகமும், கொங்கை துலுக்குமாய்,—ஆடகப்பொன்

313. கட்டிலின்கீழ் வந்து கவிழ்ந்துநிற்ப தோ,களப
வட்டமுலை காட்டி மறைப்பதோ,—பெட்டிதனில்

---

308. மூப்பு-முதுமை. ஆயி-தாய். வேர்க்குது-வியர்வை கொட்டுகிறது.
ஏற்கையுடன்-விருப்பமுடன்.

309. அக்கணமே-அப்பொழுதே.

310. நொடி-நொடிப்பொழுது.

311. கூச்சம்-நாணம். குணலை-நாணத்தால் உடல் வளைதல். கொஞ்சுதலைப் பேச்சு-கொஞ்சுமொழி. போர்த்த-மூடிய. பிடவை-சேலை.

312. பாடகம்-காலணியில் ஒன்று. பாக்கு ஒதுக்கம்-பாக்கு வைத்திருக்கும். சூடகம்-கைவளை. கொங்கை-தனம். துலுக்கு-அசைவு (குலுக்கு). ஆடகப்பொன்-பொன் வகை நான்கில் ஒன்று.

313. களபம்-சந்தனம்.

314. வாடைப் பொடிஎடுக்கும் மார்க்கம்போல்
வந்துமெள்ளக்
கூடிக் கலந்திருந்து கொள்வதோ,—வேடிக்கை;

315. பாக்குக் கொடுக்கும்அந்தப் பாசாங்கோ, செம்பவள
வாய்க்குள்ளே புன்சிரிப்பின் மார்க்கமோ,—
நோக்கமாய்ச்

316. சேலையொரு தட்டுஉடுக்கும் தீவரமோ, பூங்குழலின்
மாலை குலைத்திடும்அம் மாயமோ,—சாலம்என்ன

317. சொல்லுவேன்? பாரத் துணைமுலைக்கண்
மார்புஅழுந்தப்
புல்லுவார்; மேனி புளகிப்பார்;—மெல்லப்

318. பிடவை அவிழ்ப்பார்; பிணைந்திறுகக் கட்டித்
துடையை நெருக்கச் சொலுவார்;—இடையை

319. நெளிப்பார்; கவுளை நெருக்கி இதழ்ஊறல்
அளிப்பார்; குழைந்து வசமாவார்;—களிப்பாக

320. முத்திடுவார்; முத்தம் முகப்பார்; செவிக்குள்ளே
கத்து குரலெழுப்பிக் காட்டுவார்;—தத்தரமாய்

---

314. வாடை-வாசனை.

315. பாசாங்கு-வஞ்சனை. நோக்கம்-விருப்பம்.

316. தட்டு உடுக்கும் - தட்டுவைத்து உடுக்கும். தீவரம்; விரைவு. குழல்-கூந்தல். சாலம்-மாயம்.

317. பாரம்-பெரிய. துணை-இரண்டு. அழுந்த-பதிய. புல்லுவார் தழுவுவார். மேனிபுளகிப்பார் - மெய்சிலிர்ப்பார்.

319. கவுள்-கன்னம். இதழ்ஊறல்-இதழமுது.

320. முத்திடுவார் - முத்தமிடுவார். முகப்பார் - முகம் மகிழ்ந்து விரும்புவார். கத்து குரல் - கூவும்ஓசை. தத்தரமாய்-நடுக்கமாய்.

321. மேற்கொள்வார்; ஆர்மேல் விசாரம்உனக்கு என்றழுது
மார்க்கமாக் கண்ணீர் வருவிப்பார்;—வேற்கருங்கண்

322. பூசலா டக்,காதும் பொன்னும் கிடந்துதுவண்டு
ஊசலா டக்கொப்பு உடன்ஆட,—வாசமலர்க்

323. கூந்தல் அவிழ்ந்து குளிர்ந்த முகம்மறைப்பக்,
காந்தள்அங்கை நீக்கிவெளி காண்பிக்க,—
மாந்தளிர்ப்பொன்

324. மெய்யும் சிலீர்என்ன, மிக்கசீர்த் தாடனம்செய்
கையும் பளீர்என்னக், கண்ணென்னும்—மையெழுதும்

325. கூற்றும்செவ் வேல்என்னக், கொவ்வைமணி
வாய்ப்பவளம்
வேற்றுக் குணமாய் வெளேல்என்ன,—நாற்றிசையும்

---

321. விசாரம்-கவலை. வேற்கருங்கண்-வேல்போன்ற கருங் கண்.

322. பூசலாட-போர்செய்ய. துவண்டு-அசைந்து. கொப்பு-காதணியில் ஒன்று.

323. காந்தள் அங்கை-காந்தள் மலர் போன்ற அழகியகை.

324. மெய்-உடல். சிலீர்என்ன-குளிர்ச்சியடைய. சீர்த் தாடன்ம்செய் கை - சிறப்புடன் தட்டுகின்ற கை. பளீர்என்ன-ஒளிக்குறிப்பு(பளிச்சிட).மை-அஞ்சனம்.

325. கூற்று-யமன். செவ்வேல் என்ன-செந்நிறமடைய. கொவ்வை-கொவ்வைப் பழம். வாய்ப் பவளம்-வாயாகிய பவளம். வேற்றுக்குணம்-வேறுகுணம். வெளேல் என்ன-வெண்மை நிறமடைய. கலவிக் காலத்தில் கண், வெண்மை நிறம் மாறிச் செந்நிறம் அடையும். இதழ் செந்நிறம் மாறி வெண்ணிறம் அடையும்.

326. கூட்டுபொடி வாடை குபீர்என்னக், கோலமுன்கை
காட்டுதொடி ஓசை கலீர்என்ன,—ஈட்டுகுறு

327. முத்தனைய வேர்வு முகமும் பளபளெனத்,
தத்துமணிச் சுட்டி தளதளெனப்,—பத்திபடும்

328. ரோமத்து ஒழுக்கின் உதரச் சுழிஎறியச்,
சேமித்த காமத் திவலைசிந்திப்,—பூமெத்தை

329. எங்கும் மணங்கமழ, ஏக வடம்புரளக்,
குங்குமத் தங்கக் குடங்குலுங்க,—அங்கே

330. மருவி மருவி வலசாரி வந்து,
திரியும்இட சாரி திரும்பிப்,—பெருகுதையா

331. போகம், எனக்குப் பொருது பொருதுஎன்று,
மோக மழலை மொழிபதறித்,—தாகமுமாய்த்

---

326. வாடை-மணம். குபீர்என்ன-விரைவுக் குறிப்பு (விரைந்து மணம் வீச). கோல முன்கை—அழகிய முன்னம் கை. தொடி—வளையல். கலீர் என்ன—ஒலிக் குறிப்பு (ஒலிசெய்ய). குறு-சிறு.

327. முத்தனைய - முத்தைப்போன்ற. வேர்வு - வேர்வை. சுட்டி-நுதலணி. பத்தி-பாத்தி; வரிசை.

328. ரோமம் - மயிர். ஒழுக்கு - வரிசை. உதரச்சுழிஎறிய-வயிற்றில் மயிர்ச்சுழிதிகழ. திவலை-துளி.

329. ஏகவடம்-தனித்த மணிமாலை. தங்கக்குடம் - தங்கக் குடம்போன்ற தனம்.

330. மருவி - கலந்து. வலசாரி-வலப்புறம் சுற்றுதல். இட சாரி-இடப்புறம் சுற்றுதல்,

331. போகம்-இன்பம். மோகம்-காமம். தாகம்-வேட்கை.

332. தள்ளாடிச் செல்லும், தளர்நடையும், பாவனையும்,
கள்ளா! உன்மீதில்வைத்த காதல்காண்!—
விள்ளுவதுஏன் •

333. உன்னாலே இவ்வாறு உடல்முறியப் பாடுபட்ட
மின்னாரைச் சும்மா விடுவாயோ?—முன்னே

334. மரியாதை உள்ள மனிதரைப்போல் கள்ளா!
தெரியாமல் ஊரில் திரிந்து,—வரிநெடுங்கண்

335. கன்னியருக் குள்ளே கணக்காகக் கேட்டவட்குச்
சொன்ன பணயந் தொகையாக—முன்னே

336. கொடுத்தனுப்பி, ராத்திரிபோய்க் கோலா கலமாய்ப்
படுத்தலுத்த பின், உறக்கம் பார்த்துக்—கெடுத்துவிடச்

337. சொக்குப் பொடிஎடுத்துத் தூற்றி, உடைமை
எல்லாம்
கைக்கொத்த வண்ணங் கழற்றியே,—ஒக்கப்பின்

---

332. செல்லும்-செல்லுகின்ற. பாவனை-வேஷம்; (நடிப்பு). கள்ளா - இச்சொல் இங்கு பணத்தைக் குறித்து நிற்கிறது. விள்ளுவது-சொல்வது.

333. மின்னார்-மகளிர்.

334. மரியாதை உள்ள மனிதரைப் போல்-யோக்கியமான மனிதர்களைப் போல. வரி - செவ்வரி, கருவரி. நெடுங்கண்-நீண்டகண்.

335. பணயம்-ஈடாகக் கொடுக்கும் பொருள்.

337. சொக்குப்பொடி - அயர்ந்து தூங்கும்படி போடும் பொடி. தூற்றி-தூவி. உடைமை - செல்வம். ஒக்க-ஒருமிக்க.

338. வேவாள் விடாமல் விடியல்ஒரு சாமமெனப்
போவார்கள் உன்னுடைய போதிப்பு;—நோவாக

339. மாய மருந்தையிட்டும், வாடைகுளித் தும்,செபித்தும்,
தூயதிரு நீறுநெற்றி தொட்டிட்டும்,—நாயகரைப்

340. போட்டிசெய்தும், தெட்டிப் பொருள்பறித்த
பாவம்இதோ
காட்டியதென்று எல்லோர்க்கும் காண்பிப்பாய்;-
கேட்டதெல்லாம்

341. உள்ளதுள்ளது என்பார்கள் உட்கபடம் கண்டிருந்தும்,
வெள்ளைவெள்ளை என்பார்கள் மேதினியோர்;—
எள்ளளவும்

342. தேறுவதிங்கு, ஆராலும் தேறப் படாது;உன்னைக்
கூறுவதிங்கு என்னாலே கூடுமோ ?—பேறுதரும்

343. பொன்னே! நவமணியே! புண்ணியவா னே!உலகில்
உன்னாலே முற்றாதது ஒன்றுண்டோ ? -மின்னார்க்கு

344. மெய்யன்ப னைதிரு வேங்கடே சேந்திரன்என்
ஐயன் கருத்தில்அபி மானித்துத்,—துய்யதிரு

---

338. வேவாள்-விசாரணை ஆள். போதிப்பு-போதனை.

339. நோவாக-நோய்உண்டாக. வாடைகுளித்தும் - மண நீரில் குளித்தும்.

340. போட்டிசெய்தும் - எதிர்ப்புச் செய்தும். தெட்டி-வஞ்சித்து.

341. கபடம்-வஞ்சகம். மேதினியோர்-உலகோர்.

342. தேறப்படாது-தெளிந்து கூறமுடியாது. பேறு-பயன்.

343. நவமணி-ஒன்பது வகைமணி. முற்றாதது-முடியாதது.

344. மெய்யன்பன் - உண்மை அன்பன். கருத்தில் அபிமானித்து-உள்ளத்தில் அபிமானம் கொண்டு.

345\. நெல்லைநகர் வாழும் நிமலனுக்கும், தென்இமய
வல்லியெனும் ஞான வடிவாட்கும்,—நல்ல

346\. திருக்கலி யாணத் திருநாள் மிகவும்
பெருக்கமுடன் செய்வித்த பின்பு,—மருக்கமழ்பூஞ்

347\. சோலைசெறி நெல்லேசர் தோள்நிறையக் காந்திமதி
மாலையிடும் ஆயிரக்கால் மண்டபத்தே,—வேலைவிடம்

348\. உண்ட பெருமானை, உண்மை மறைப்பொருளை.
சண்டனைமுன் னுள்உதைத்த தாளானைப்,—பண்டுபதி

349\. னாறு யிரம்வருடம் அம்புவிக்கு வேந்தாகி,
மாறு முடிதரித்த வானவனை,—வீறுனத்

350\. தாம்ப்ரசபை யானைத், தவளவெள்ளி வெற்பானை,
மேம்படுசெம் பொன்மலையின் வில்லானைப்,—
பாம்பணிந்த

---

345\. நெல்லைநகர்-திருநெல்வேலி. நிமலன்-குற்றமற்றவன். (இறைவன்). இமயவல்லி-பார்வதி.

346\. பெருக்கமுடன் - மிக்கசிறப்புடன். மரு-மணம்.

347\. வேலைவிடம்-ஆலகாலவிஷம்.

348\. மறைப்பொருள்-வேதப்பொருள். சண்டனை-எமனை. தாளானை - திருவடியை உடையவனை.(மார்க்கண்டனுக்காக எமனை உதைத்தவன்.) பண்டு-முன்பு.

349\. அம்புவிக்கு - அழகிய உலகிற்கு. வேந்து - அரசன். முடிதரித்த-முடிசூடிய. வானவன்-தேவன். வீறுனம்-வீறட்டானம்.

350\. தாம்ப்ரம்-செம்பொன். தவளம்-வெண்மை. வெற்பு-மலை.

செம்பொன் மலையின் வில்லானை - மேருமலையை வில்லாகக் கொண்டவனை.

351. நீற்ருெளியும் மேனியுமாய் நின்றசீ மான்எதிரே
தோற்றியமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தை,—
மாற்றரசர்

352. வெங்கோலை நீக்கிஎங்கள் வேங்கடே சேந்திரற்குச்
செங்கோல் கொடுத்தசந்த்ர சேகரனை,—எங்கள்

353. அனவரத நாயகனை, ஆண்டவனைச், செம்பொன்
வனசமலர்ப் பாதம் வணங்கித்,—தினமும்இருந்து

354. எண்ணுன்கு அறம்வளர்த்த ஈச்வரியைத், தென்இமயப்
பெண்ணுகி அண்டமெல்லாம் பெற்றவளைக்,—
கண்ணுலே

355. காணத் தெவிட்டாத கட்டழகி யைப்,பசும்பொன்
பூணுக்கு இசைந்ததெய்வப் பூங்கொடியைச்,—
சேண்அளந்த

356. தண்டலைசூழ் காழிவரு சம்பந்தப் பிள்ளைக்குப்
பண்டுமுலைப் பால்கொடுத்த பார்வதியைத்,—
தொண்டருக்கோர்

---

351. நீற்ருெளி- திரு நீற்றின் ஒளி. மெய்ஞ்ஞானம்-மெய்யறிவு. மாற்றரசர்-பகையரசர்.

352. வெங்கோல்-கொடுங்கோல். சந்த்ரசேகரனை - சந்திரனைச் சூடியவனை.

353. அனவரத நாயகனை-என்றும் தலைவனுக இருக்கின்றவனை. வனசமலர்-தாமரைமலர்.

354. எண்ணுன்குஅறம்-முப்பத்திரண்டு வகை அறங்கள். ஈச்வரி-பார்வதி. அண்டம்-உலகம்.

355. பூணுக்கு - ஆபரணத்துக்கு. சேண்அளந்த - நெடுந்தூரம் பரந்த.

356, தண்டலை-சோலை. காழி-சீர்காழி.

357. ஆவியைக்;கொத் தோடுஎன்னை ஆண்டவளைக்,
காந்திமதி
தேவியையான் கண்குளிரச் சேவித்தேன்;—பூவுலகில்
358. வாழி திருவேங் கடநாதன் வம்சமெல்லாம்
வாழியென்று முக்காலும் வாழ்த்தினேன்;—சூழுமத
359. யானை பணிவாச லானை, அருட்கடலை,
ஞானமறை நாலும்உணர் நாயகனைத்,—தீனர்பெறு
360. தாரித் திரியம்எனச் சாற்றும்அந்த காரத்தைத்
தூரத் துரத்துகொடைச் சூரியனைத்,—தேருற்று
361. வண்ணப்பொன் மேனி,என்றும் மார்க்கண்டன்
போலிருக்க
விண்ணப்பம் செய்துநன்று வேண்டினேன்;—
கண்ணுக்குப்
362. பாங்கான காட்சிஎல்லாம் பார்த்தேன்; எவருக்கும்
பூங்காம வேளைவெல்லப் போகாதே;—ஆங்கே

---

357. ஆவி-உயிர். கொத்தோடு - குடும்பத்தோடு. என்னை ஆண்டவளை-என்னை ஆட் கொண்டவளை. சேவித்தேன்-வணங்கினேன்.

358. வம்சம்-சந்ததி. முக்காலம்—மூன்று காலங்களிலும்.

359. மறை நாலு— இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். தீனர்—இரப்போர்.

360. தாரித்திரியம்- தரித்திரம். அந்தகாரம்-இருட்டு. தூரத் துரத்தும்—வெகு தூரத்திற்கு ஓட்டும். தேருற்று- தெளிந்து.

361. மேனி—உடம்பு.

362. பாங்கான—அழகான. எவருக்கும்—யாருக்கும். காமவேள்-மன்மதன். வெல்லப்போகா- வெல்ல முடியாது. ஆங்கே—அந்த இடத்தில்.

363. திருத்தட்டை ஏந்திநிற்கும் தேவடியார் தம்முள்
ஒருத்திக்கு மால்கொண்டு உழன்றேன்; கருத்தில்

364. குடிபுகுந்த மாதுபேர் குங்குமப்பூங் கோதை,
அடிகளைநீ கண்டால் அறிவாய்;—துடிஇடையாள்

365. பூண்டு பொறுத்திட்ட பூஷணமும் பொங்கமும்என்
ஆண்டவனே நீயல்லால் ஆர்தந்தார்?—வேண்டுபல

366. மாந்தர்அங்கு நட்புஎனினும், வாவா! விலைமாதர்க்
காந்தரியம் உன்னிடத்தில் அல்லவோ?—காந்திபெறு

367. கோலவளை இட்ட கொடுங்கையிலே நான்படுத்த
காலம்அல்ல வோஎனக்குக் கண்உறங்கும்;—நீலி

368. கொலைக்கருங்கண் பாய்ந்து குடைந்திடும் என்மார்பில்
முலைக்கருங்கண் பாய்ந்தாலே முக்யம்;—பெலக்கத்

---

363. ஒருத்திக்கு மால் கொண்டு உழன்றேன்-ஒருத்திமேல் காதல் மயக்கம் கொண்டு வருந்தினேன். கருத்தில்—உள்ளத்தில்.

364. குடிபுகுந்த-குடியேறிய. மாதுபேர்-மாதின் பெயர். துடி உடுக்கை.

365. பூண்டு-அணிந்து. பூவுணம்-ஆபரணம். பொங்கமும்--பொலிவும்.

366. வாவா-அப்பனே! காந்திபெறு-ஒளியுடைய.

367. கோலவளை—அழகியவளையல். கொடுங்கை-உள் வளைந்த கை.

368. கருங்கண்—கருவிழி கொண்ட கண். கருங்கண்-தனத்தின் காம்பு. பாய்ந்தாலே முக்யம்-பாய்வதுதான் பிரதானம். பெலக்க-மிகுதியாக.

369. துரைப்பணம்நீ கைபுகுந்தால், தோகைமட மின்னுள்
அரைப்பணம்என் கைக்குள் வசம்ஆமே;—
வரைப்புறத்தில்

370. பீடுபெறு மாமேகம் பெய்யவந்த போது,மயில்
ஆடுவதுஅல் லாக்கால் அமையுமோ ?—ஓடுவதோர்

371. வெய்யவனைக் கண்டு விரிவதல்லால், பூங்கமலச்
செய்ய மலர்மகிழ்ச்சி செய்யுமோ ?—ஐயா! நீ

372. தூதுசென்றால், வந்துஎனது சோகம் தணிப்பள்; அந்த
மாதுதன்னைப் போய்அழைத்து வா.

முற்றிற்று.

---

369. துரை-துரையாகிய. பணம் நீ-பணமேநீ. கை புகுந்தால்-கைக்குக் கிடைத்தால். தோகை மட மின்னுள்-மயில் போன்ற சாயலை உடைய மின்னற் கொடியாளின் (குங்குமப் பூங்கோதை). அரைப் பணம்-அரையின் உள்ளே உள்ள பாம்பின் படமாகிய அல்குல். (சிலேடைநயம் உணர்க). வரைப் புறத்தில்-மலைப் பக்கத்தில்.

370. பீடு பெறு—பெருமை பொருந்திய. ஆடுவது அலாக்கால் அமையுமோ-ஆடுமே அன்றி ஆடாமல் இருக்குமா.

371. வெய்யவன்—சூரியன். கமலம்-தாமரை. செய்ய-சிவந்த. தாமரைப்பூ, சூரியனைக் கண்டால்விரியும். இல்லை எனில் தானாக விரியாது.
ஐயா-இங்கே இச்சொல் பணத்தைக் குறிக்கிறது.

372. சோகம் தணிப்பள்-துன்பத்தைத் தணிப்பாள். அந்த மாதுதன்னை-அந்த மங்கையை.(குங்குமப் பூங்கோதையை.
மேகத்தைக் கண்டால் மயில் ஆடும்; இல்லை எனில் ஆடாது.சூரியனைக் கண்டால் தாமரை மலரும்; இல்லை எனில் மலராது. அது போலப், பணமே! நீ தூதுசென்றால் அவள் உனைக் கண்டு மகிழ்ந்து வருவாள். அழைத்துவா.

குறிப்புரை விளக்கம் முற்றிற்று.

## புலியூர்க் கேசிகன் பதிப்புக்கள்

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் | | ரூ 3. 00 |
| நளவெண்பா | | 1. 50 |
| புறநானூறு | (மூன்ரும் பதிப்பு) | 2. 65 |
| கலிங்கத்துப் பரணி | (இரண்டாம் பதிப்பு) | 2. 00 |
| சிலப்பதிகாரம் | (மூன்ரும் பதிப்பு) | 3. 00 |
| அகநானூறு | | |
| களிற்றியானைநிரை | | 2. 50 |
| மணிமிடைபவளம் | | 3. 50 |
| நித்திலக் கோவை | | அச்சில் |
| சிலம்பும் வாழ்வும் | | 2. 00 |
| தமிழ்ச் சாரல் | | 2. 00 |
| ஏர் பிடித்தவர் ஏற்றம் | | 2. 00 |
| குறள் தந்த காதல் இன்பம் | | 2. 00 |
| வாழ்க்கை அமுதம் | | 2. 00 |
| வைர மோதிரம் | | 0. 75 |
| அறப்போர் ஆற்றிய ஆன்ரூேர்கள் | | 2. 00 |

அருணு பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம் :: சென்னை-17

102305

## புலியூர்க் கேசிகன் தயாரிப்புக்கள்

| | |
|---|---|
| அநுபவ சமையற் கலை (ஐந்தாம் பதிப்பு) | 1. 50 |
| அநுபவ வைத்தியம் (நான்காம் பதிப்பு) | 1. 00 |
| **மாவீரர் வரலாறுகள்** | |
| பூலித்தேவன் | 1. 00 |
| கான்சாகிப் கம்மந்தான் | 2. 00 |
| தீரன்திப்பு சுல்தான் | 3. 00 |
| பகதூர் வெள்ளை | 0. 65 |
| பூலித்தேவனா? புலித்தேவனா? | 0· 50 |
| டாக்டர் சண்முகம் செட்டியார் | 2. 50 |
| புத்தர் ஜாதகக் கதைகள் | 3. 50 |
| அழகின் ரகசியம் | 1. 50 |
| தசகுமார சரிதம் | 1. 00 |
| அதிசயச் செய்திகள் | 1. 00 |
| **கம்பதாசன்** | |
| கவிதைகள் | 6. 00 |
| கதைகள் | 2. 00 |
| நாடகங்கள் | 2. 00 |

O-18N,P
N61

அருணா வெளியீடு

தியாகராய நகரம் :: சென்னை — 17.

அருணா வெளியீடு

JACKET PRINTED AT PREMA ART PRINTERS, MADRAS-24